ISSN 1391-9504

# Vijey விஜய்

10.03.2010 - மலர் 07, இதழ் 01

வருடங்கள் ஏழு
காணுகின்றோம் இன்புடனே!


அறிவோடு ஒன்றுகூடி
நல்லனவே கற்றிடவே
படைத்திட்டோம் ஆக்கங்களையே!

தொடர்ந்திடுவோம் பயணத்தையே
அடைந்திடவே நற்பயன்களையே!

வாருங்கள் எம்முடனே
படைத்திடுவோம் நல் உலகினையே!



விண்வெளி சென்ற விலங்குகள்



பயணிகள் கப்பலின் செயற்பாடுகள்




விலை
ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாற்றமடைந்த தேசத்தின் எல்லை

ஒல்லாந்தர் பாதை அமைத்தது குறித்து இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கு சரியான தெளிவு ஏற்படவில்லை. ஏன் அவ்வாறு பாதை அமைத்தார்கள் எனக் கேட்டான். ஆங்கிலேயரின் தவறான நோக்கத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே இவ்வாறு செய்ததாக அவர்கள் மன்னனுக்குத் தெரியப்படுத்தினர். அத்தோடு, மன்னன் அமைதியானான்.

இரண்டாம் இராஜசிங்க மன்னன் நாட்டின் உள்விவகாரங்களைச் சரியான முறையில் கொண்டு வந்தபின்னர் நிலைமை மாறியது. அவர்கள் ஒல்லாந்தருக்கு எதிராக எழுந்தனர். கொட்டியாரம், மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களில் மாத்திரமல்ல காலி மற்றும் கொழும்பு முதலிய இடங்களிலும் தமக்கு சுதந்திர வர்த்தக உரிமையை வழங்க வேண்டுமென்றும் அவ்வாறு வழங்கும் வரை நாட்டின் எல்லைகளில் சேனைகளை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் ஒல்லாந்தரை நிர்பந்தித்தனர்.

அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், மன்னன் அரந்தர எனும் இடத்தைக் கைப்பற்றினான்.

ஒல்லாந்தர்களோ அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த எதிர்ப்பைக் காட்ட அவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கல்பிட்டி ஆகிய துறைமுகங்களை மூடினர். அது அக்காலத்தில் இருந்த செல்வந்தர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. அதனால் அவர்கள் கொழும்புக்கு இடம்பெயர்ந்தனர். அத்துடன், அவர்கள் ஒல்லாந்த சிறைக் கைதிகளை விடுவிக்கும்படி கேட்டு தூதுவர் ஒருவரை அனுப்பும்படி ஒல்லாந்த ஆள்பதியிடம் கூறினர். எனினும், ஏற்கனவே அனுப்பிய தூதுவர்கள் மீண்டும் திரும்பி வராததால் ஆள்பதி அதனை விரும்பவில்லை. ஆனால், செல்வந்தர்களோ தூதுவர் ஒருவரை அனுப்பும்படி ஆள்பதியிடம் விடாப்பிடியாக நின்றனர்.

இறுதியில் ஹென்றி பைஸ்டர்பெயல்ட் எனும் பெயருள்ள அச்சமற்ற துணிவான படை வீரனொருவன் மன்னனுடன் நியாயம் கேட்டு விவாதிக்க விரும்பினான். எனினும், அவன் சென்று ஒருவாறு தப்பிப் பிழைத்து கொழும்பு வந்து சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான ஏழாவது ஆண்டில் 'விஜய்'



அன்பு வணக்கம்!

ஆறு வருடங்களை நிறைவு செய்து, ஏழாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது 'விஜய்'. தமிழ் பத்திரிகை உலகில் இளம்பராயத்தினருக்கு, மாணவர்களுக்கென தனியான ஒரு பத்திரிகை இல்லாத குறையை நிறைவு செய்வதற்காக 'விஜய்' பத்திரிகை அறிமுகமாகியபோது அதன் வரவு குறித்து மாணவர்கள் மட்டுமன்றி; ஆசிரியர்கள், பெற்றோர்கள், புத்திஜீவிகள், சமூகநலன் விரும்பிகள் என பலதரப்பினரும் தமது பாராட்டுக்களையும் வரவேற்பையும் அன்று தெரிவித்திருந்தனர். அவர்களின் அந்த தொடர்ச்சியான ஊக்குவிப்புக்களின் காரணமாகவே இன்று வெற்றிகரமாக ஏழாவது ஆண்டில் 'விஜய்' காலடி எடுத்து வைக்கின்றது.

மாணவர்கள் மட்டத்தில் வாசிப்புத்திறன் அதிகரித்துள்ளது என்பதற்கு 'விஜய்'யும் ஒரு காரணமாக அமைந்திருப்பது குறித்து எமக்கு மகிழ்ச்சிதான். மேலும், மாணவர்களின் கல்வித்துறையில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் எந்தளவிற்கு ஆர்வமாக உள்ளனர் என்பதை அவர்கள் எமக்கு ஈடுபாட்டுடன் வழங்குகின்ற ஆலோசனைகள், கருத்துக்கள் ஆகியனவே சான்று. இந்நிலையானது மாணவ சமுதாயமானது தனித்து விடப்படவில்லை என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

எந்தவொரு விடயத்தை வழங்குவதானாலும் முதலில் அந்த விடயமானது மனதைக் கவரக்கூடியதாக இருத்தல்வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டே மிகுந்த கவனமெடுப்புக்களுடன் 'விஜய்'யின் பக்கவடிவமைப்புக்களிலும்கூட அதிக சிரத்தை மேற்கொள்ளப்படுகின்றது.

'விஜய்' பத்திரிகையை வாசிக்கின்ற பிள்ளைகள் சகலதையும் அறிந்த, முழுமை பெற்ற ஒரு சமுதாயமாக மிளிரவேண்டும் என்பதே எமது முக்கிய குறிக்கோளாகும். ஏனெனில், வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு உரிய வழிகாட்டல்கள் இருந்தால்தான் அவர்கள் செல்லும் பாதை நேரியதாக இருக்கமுடியும். அந்தவகையில், மாணவப் பருவத்தினருக்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் அந்த வழிகாட்டிகளாக இருப்பதுபோல் 'விஜய்'யும் அந்த வழிகாட்டலில் பங்காளியாக இருப்பது பெருமைக்குரியதே.

அண்மைக்காலமாக 'விஜய்'யில் நாம் பல மாற்றங்களை மேற்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். வாசகர்களின் நாடிபிடித்தறிந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களே அவை. வாசகர்களே எமது எஜமானர்கள் என்ற வகையில், அவர்களின் அபிப்பிராயங்களுக்கு முக்கிய இடத்தை வழங்க எப்போதும் நாம் பின்நிற்பதில்லை. எனவேதான், இனிவரும் காலங்களில்கூட 'விஜய்'யில் உங்களுக்கு விருப்பமான இன்னும் புதிய அம்சங்களை இணைப்பதற்கு எண்ணியுள்ளோம். அதற்காகவே உங்களது கருத்துக்களை அறியும் பொருட்டு 'விஜய் அதிரடி அலசல்' என்ற கேள்விக்கொத்தொன்றை பிரசுரித்து வருகின்றோம். இதில் உங்கள் அபிப்பிராயங்களை தெரிவிக்கமுடியும்.

உலகில் சகலதும் கற்றவர்கள் என்று எவரும் இருக்கமுடியாது. அவ்வாறே, சகலதும் தெரிந்தவர்கள் என்று எவரும் இருக்கவும் முடியாது. ஏனென்றால், ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் புதுப்புதுக் கண்டுபிடிப்புக்கள், தகவல்கள் என புதியன பிறப்பெடுத்துக்கொண்டே இருக்கின்றன. எனவே, சகலரும் இன்னும் கற்கவேண்டிய-அறியவேண்டிய நிலையில்தான் இருந்து வருகின்றோம். கற்றதையும் அறிந்ததையும் பிறருக்குப் பகிரும் போதே சமூகமானது நிறைவை நோக்கிச் செல்லும். அவ்வாறான நிறைவை நோக்கிய பயணத்தில் 'விஜய்'யானது அறிவுசார் அட்சயபாத்திரமாக இருக்கும் என்பதை தெரிவிக்க விரும்புகின்றோம்.

'விஜய்'யில் தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள் வழங்கப்பட்டு வருகின்றமைக்கு வரவேற்பு பெருகிவருகின்றது. கடந்த முறை புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளானது 'விஜய்'யில் வழங்கிய மாதிரி வினாத்தாளின் சாயலில் இருந்தமையால், தமக்கு குறித்த வினாத்தாள்கள் இலகுவாக இருந்ததாக ஏராளமான மாணவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம். கடினமானவை எல்லாம் இலகுவானவையாக அமைவதற்கான மாற்றத்தை ஏற்படுத்துவதே 'விஜய்'யின் நோக்கு; இனிவரும் காலங்களிலும் அந்த இலக்கை நோக்கியே பயணிப்போம்.

வாசித்து எறியும் பத்திரிகையாக அல்லாமல், வாசித்து அறியும் பத்திரிகையாக 'விஜய்' அமைந்துள்ளதையிட்டு எமக்குப் பெருமைதான். தொடர்ந்தும் 'விஜய்'யை வாசிப்பதுடன், ஏனையவர்களுக்கும் 'விஜய்' பற்றி அறிமுகம் செய்யுங்கள். எப்போதும் நாம் உங்களுடன் துணைநிற்போம்.

'விஜய்'யை வாசிக்கின்ற பிள்ளைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் மற்றும் நமது பத்திரிகை முகவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

தொடர்ந்து பயணிப்போம்; கரங்களை கோர்த்திடுவோம்.

நன்றி

இப்படிக்கு,

*வி.ரெட்லி ஹெரிசன்*
(ஆசிரியர்)

# வடக்கில் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்கள்



**வடக்கில் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்குத் தேவையான மேசை, கதிரைகள் உட்பட சுமார் 34 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

**மேற்படி, பாடசாலை உபகரணத் தொகைக்குள் 1000 மேசைகளும் 1000 கதிரைகளும் அடங்கியிருப்ப தாகவும், இதுதவிர; வடக்கில் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்குத் தேவையான மேலும் பல உபகரணங்கள் இன்னும் சில நாட்களில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

# பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி

நாடெங்கிலும் தற்போது கடமையிலுள்ள 7800 பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக நாடெங்கிலும் 42 பயிற்சி நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, இரண்டரை வருட காலஎல்லையுடைய இந்தப் பயிற்சிநெறிகள் வாரஇறுதி நாட்களில் நடைபெறவுள்ளதால், பாடசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதளவில் 12,000 பயிற்றப்படாத ஆசிரியர்கள் கடமையில் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# குழந்தைகளைப் பாதிக்கும் 5 நோய்களுக்கு ஒரு தடுப்புமருந்து



குழந்தைகளுக்குத் தொற்றக்கூடிய ஐந்து வகையான நோய்களைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் 'பென்டா வேலண்ட்' எனும் பெயரிலான ஒரு தடுப்புமருந்தை ஏற்றுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொண்டைக்கரப்பான், கக்குவான் இருமல்,ஹெபடைடிஸ்-B, விசர் நாய்க்கடி மற்றும் தசை விறைப்பு (டெடனஸ்) ஆகிய ஐந்து நோய்களின் தாக்கத்தைத் தடுப்பதற்காக இந்த தடுப்பு மருந்து அரசாங்க மருத்துவ நிலையங்களில் வழங்கப்படும் என கொழும்பு தொற்றுநோய்ப் பிரிவின் பிரதித் தொற்றுநோய் நிபுணர் வைத்தியர் சுதத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் மூக்கூட்டு வெக்ஸின், ஹெபடைடிஸ்-B மற்றும் ஹிப் ஆகிய தடுப்பு மருந்துகள் வெவ்வேறாக குழந்தைகளுக்கு வழங்கப்பட்டதாகவும், அதற்குப் பதிலாக அரசாங்க மருத்துவ நிலையங்களுக்கு வருகின்ற 2, 4, 6 மாத வயதினைப் பூர்த்தி செய்த குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் 'பென்டா வேலண்ட்' எனும் தடுப்பு மருந்து மாத்திரம் ஏற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேளை வாய்ப்பபை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சோழ மன்னர்களால் பூஜிக்கப்பட்ட திருமலை வெல்கம் விகாரை

**பொலன்னறுவை யுகத்தின்போது நமது நாட்டை ஆட்சி செய்த சோழ மன்னர்கள் பௌத்த வணக்கஸ்தலங்களை அழித்தனர் என பொதுவான ஒரு கருத்து நிலவுகின்றது. எனினும், அக்கருத்துத் தவறானது என்று காட்டும் வகையில் திருகோணமலை வெல்கம் விகாரை சோழ மன்னர்களின் பக்திக்கும் வணக்கத்திற்கும் பாத்திரமான புனித தலமாகத் திகழ்ந்தது**

வெல்கம் விகாரையானது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பௌத்த புனித தலங்களில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. விகாரையின் புனித தலத்தில் கிடைத்த 'பிராமி' எழுத்துக்களால் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் அநுராதபுர யுகத்திற்குரியவை என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். அநுராதபுர யுகத்தில் ஆட்சி செய்த பாத்தியன் எனும் மாமன்னனின் (கி.பி 143-167) அமைச்சரொருவரால் அறவிடப்பட்ட வரி வெல்கம் விகாரைக்கு வழங்கப்பட்டது என அந்தக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இங்கு அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற செங்கல் ஒன்றில் கி.பி 1 ஆம் நூற்றாண்டுக்கே உரித்தான எழுத்துக்கள் காணப்பட்டதாக பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகின்றார்.

பொலன்னறுவை யுகத்தின்போது வெல்கம் விகாரையானது மிகவும் முக்கியமான பௌத்த புனிதத் தலமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த யுகத்தில் இலங்கையை கைப்பற்றிய சோழ மன்னர்கள் பௌத்த புனிதத் தலங்களை அழித்தார்கள் என்பது ஒரு பொதுவான கருத்தாக இருக்கின்றது. எனினும், இலங்கையை ஆட்சி செய்த இராஜராஜ சோழ மன்னன் வெல்கம் விகாரைக்கு கிராமம் ஒன்றை வழங்கியதாக அங்கு கிடைத்த கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அந்த விகாரையானது இராஜராஜசோழ மாமன்னரின் பெயரால் 'இராஜராஜ பெருமாள் பள்ளி' என்றும் நாமம் சூட்டப்பட்டது. சோழ ஆட்சியாளர்களில் பலர் இந்தப் புனித விகாரையை புதுப்பித்து அங்கு பல்வேறு வழிபாடுகளை நடத்தியதாகவும் அந்தக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. வெல்கம் விகாரை புனித பூமியில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட 18 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை விகாரையின் நுழைவாயிலின் தரையில் பதிக்கப்பட்ட கருங்கல்லிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இவ்விகாரையின் புனர்நிர்மாணப் பணியின்போது இவ் வரலாற்றுச் சான்றுகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இடம்மாறியுள்ளதாகத் தெரிகிறது. இக்கல்வெட்டுக்களில் சோழப் பேரரசின் வருடங்கள் ஆண்டுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பல கல்வெட்டுக்களில் முதலாம் இராஜேந்திர சோழனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த தமிழ் கல்வெட்டுக்களின்படி வெல்கம் விகாரை அமைந்துள்ள பிரதேசத்தை 'மானாவத்துரட்ட' என அழைத்துள்ளனர். வெல்கம் விகாரையை 'நாத்தனார்' கோயில் என்றும் அழைத்துள்ளனர். சோழர் ஆட்சிக் காலத்தில் வெல்கம் விகாரைக்கு அருகில் சோழர் படைப்பிரிவு நிறுத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படைப்பிரிவில் இருந்த பௌத்த மத சோழ வீரர்கள் வெல்கம் விகாரையில் பூஜை செய்து வழிபட்டதாகவும் கருத்தொன்று நிலவுகின்றது. வெல்கம் விகாரையானது தமிழர்களின், பௌத்தர்களின் புனிதத் தலமென்பது முக்கிய விடயமாகும்.

பெரியகுளம் எனும் குளத்திற்கு அருகில் காணப்பட்ட வரலாற்று சான்றுகள் குறித்து ஆய்வுசெய்ய பேராசிரியர் செனரத் பரணவிதான 1929 இல் முதன்முதலாக அங்கு சென்றார்.

1934 இல் வெல்கம் விகாரையைச் சூழவுள்ள பிரதேசம் தொல்பொருள் ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டு பாதுகாக்கப்படும் பிரதேசம் என பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின் பேராசிரியர் பரணவிதான அவர்களின் வழிகாட்டலின் கீழ் நினைவுச்சின்னங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கு இரண்டு சிலை மனைகளின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதலாவது சிலை மனையில் கர்ப்பக்கிரகமும், மூலஸ்தானமும் அதனைத் தொடர்ந்து நீண்ட மண்டபம் போன்ற அமைப்பும் காணப்பட்டதாகவும் பிரதான வாயிலில் 'சந்திரவட்டக்கல்' பதிக்கப்பட்டிருந்ததாகவும் பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகின்றார். இந்த சிலை மனை (சிலை வீடுகள்) இந்து வாஸ்து சாஸ்திரப்படி அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலை மனைக்கு பிரவேசிக்கும் இடத்தின் முன்பக்கம் கதவு இல்லாமல் கிழக்குப் பக்கம் வாசல் அமைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த பௌத்த இல்லத்திற்கும்கூட புதையல் திருடர்களின் தொல்லைகள் ஏற்பட்டுள்ளதாக பரணவிதான குறிப்பிடுகின்றார். நாட்டப்பட்டிருந்த கருங்கல் நினைவுச் சின்னங்களை உடைத்து சிலையின் பாதத்தின்கீழ் இருந்த தொல்பொருள் வஸ்துக்களையும் புதையல்களையும் திருடிச் சென்றுள்ளனர். இங்கு காணப்படும் செதுக்கல் கலையானது பொலன்னறுவை சிவன் தேவாலயத்தின் செதுக்கல் கலைக்கு ஒப்பானதாகும்.

வெல்கம் விகாரைப் பூமியிலிருந்து மற்றொரு பெறுமதியான தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2 1/2 அடி உயரமான வெண்கல விளக்கே அதுவாகும். அது தரையில் ஊன்றக்கூடிய ஒரு வகை விளக்காகும். அதன் அடிப்பாகத்தைச் சுற்றி தமிழ் மொழியில் செதுக்கப்பட்ட கவிதை ஒன்று உள்ளது. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் எழுத்துக்களே அவை.


ஏரநாடன் கண்டான் யக்கன் என்பவனால் பூஜிக்கப்பட்ட பரிசுத்தமான விளக்கென்பது அப்பாடலின் கருத்தாகும். 11 ஆம் நூற்றாண்டிற்குரிய இந்த விளக்கானது இந்தியாவில் செய்யப்பட்டதென பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகின்றார்.


காஷ்மீருக்கு இயற்கை எண்ணற்ற கொடைகளை வாரி வழங்கியுள்ளது. பனி படர்ந்த நெடிதுயர்ந்த மலைகள், சலசலவென்று ஓடும் ஓடைகள், படிகத் தூய்மையுடன் பளபளக்கும் ஏரிகள், மலர்த்தோட்டங்கள், புல்வெளிகள், அப்பிள் தோட்டங்கள் ஆகிய அனைத்தும் உலகமெங்கிலும் இருந்து எண்ணற்றோரை ஈர்த்து வருகின்றன. இங்குள்ள அப்பிள் தோட்டங்களுக்கு ஒரு நீண்ட, செழுமையான பாரம்பரியம் உண்டு. 'லலித தித்யா', பொற்கால அரசர்கள் என்று வர்ணிக்கப்படும் 'அவந்திவர்மன்', 'சுல்தான் ஜைனுல் அபிதீன் பாதுஷா' போன்ற அரசர்களின் காலத்துக்கு முன்பிருந்தே பழங்கள் மற்றும் பூக்களின் அடையாளமாக காஷ்மீர் விளங்கி வந்துள்ளது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சிறுவர் உள்ளத்தில்
அழகாய் பதிந்த
எங்கள் 'விஜய்' பத்திரிகையை
என்றென்றும் வாழ்த்துகின்றேன்.

டி.ஷங்கரி,
தரம்-7C, சென்.மேரிஸ் ம.கல்.,
பொகவந்தலாவ.

கதைகள், கட்டுரைகள்,
கவிதைகள் என
புதன்தோறும் பூக்கும் புதுமலரே!
அகவை ஏழுதனை அடையும் முன்னே
வான் புகழ் ஏகியவன் நீயல்லவா?

எம்.என்.முஹம்மத்,
தரம்-7B, அல்-ஹம்றா ம.வித்.,
தர்கா நகர்.




ஏழாண்டுகள் உனைத்தொடர்ந்து அறிவு பெற்றோம்.
எம் திறமை உலகறிய உன்னிடம் வளமுண்டு.
உன் சிறப்பிற்கு கோடானு கோடி வாழ்த்துக்கள்.

ஆர்.என்.மலரினி,
புகையிரத நிலைய வீதி, ஓமந்தை.

# Vijey விஜய்
# விஜய்
# வாழ்த்துப் பூங்கா

வாரம் ஒருமுறை மும்மொழிகளிலும் பயிற்சிகள்
பல அள்ளித் தந்து, அறிவூட்டிய அன்பான விஜய்யே!
உன் பணி மேலும் வளர நல்வாழ்த்துக்கள்.

காலிதா பேகம்,
ஹிங்குளை, மாவனல்லை.

விஜய்!
உன்னைப் படிப்பதால்
விண்ணளக்கிறது என் அறிவு.
எழில் கொஞ்சும் உன் இதழ்கள்
மாணவர் உளங்களைக்
கொள்ளை கொள்கின்றன.

மு.அ.மு.முர்ஷித்,
தரம்-11,
கமு/அல்-மதீனா ம.வித்.,
நிந்தவூர்.

அறிவுசார் வாரப்பத்திரிகை நீயே!
உன் ஆக்கங்களால் எமை மகிழ வைத்தாய்.
ஏழு வயதில் தடம் பதிக்கும் உனக்கு
என் பாசமிக்க வாழ்த்துக்கள்.

எம்.என்.எஃப்.நஸ்மா,
தரம்-9, ஸாஹிரா ம.ம.வித்., குருநாகல்.

புதன்தோறும் தேன் சுவை அள்ளி வரும்
பட்டாம்பூச்சியும் நீயே!
என்றும் உன் புகழ் பரவட்டும்!

மில்ஹான், சமீர், சப்ராஸ், மிராஜ்-
தொட்டவத்தை, பாணந்துறை.

என்றென்றும்
எங்களுடன்
அறிவுமிக்க தகவல்களை
அன்புடனே
பகிர்ந்துகொள்ளும்
அன்பு நண்பன் விஜய்யே!
உன் அகம் மகிழ
வாழ்த்துகிறேன்.

சி.சஞ்ஜீவன்,
தரம்-10C, யாழ்.இ.கல்.,
யாழ்ப்பாணம்.

சிந்திக்கத் தூண்டும்
சிறப்போனே!
வாசகன் மனம் பூரிக்க,
நன்மை கருதி உதித்தவனை
வாழ்த்தும் வாசகன்
நானாவேன்....

அ.நிஹ்மதுல்லாஹ்,
உயர் தரம்,
ப/அல்-பதூரியா மு.ம.வித்.,
தியதலாவை.

அறிவு எனும் தீச்சுடரை கையில் ஏந்தியவண்ணம்
பல்லாயிரம் மாணவர்களுக்கு ஒளி கொடுத்து
வழிகாட்டும் விஜய்யின் சேவைகள் தொடர என்
வாழ்த்துக்கள்.

கே.சுதர்சன், வவுனியா.

விஜய், நீ ஒரு நூலகம்; ஒரு பல்கலைக்கழகம்;
நமக்கொரு வரப்பிரசாதம். குறைந்த
விலையில் நிறைந்த விடயங்களைத் தரும் நீ,
பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றேன்.

அஹமத் அஷ்பக்,
கம்/அல்-அஸ்ஹர் ம.கல்., திஹாரிய.

புதுப்புது தகவல்களுடன்
முத்தாக மலரும் 'விஜய்யே'!
நீ சுமந்து வரும் அனைத்து
அம்சங்களும் பாராட்டத்தக்கவை.

எம்.ஜயகலா,
க்ரேய்க் த.ம.வித்.,
பண்டாரவளை.



விஜய்! சஞ்சிகைக்கு
சின்னவள் இவள்
சின்னக் கரத்தால்
எழுதும் வாழ்த்து இது....
நீ நீடூழி வாழ்க!

எஸ்.எஃப்.சம்ஹா,
முள்ளிப்பொத்தானை.



ஏழாவது ஆண்டில் நுழைகின்றபோதும்
எட்டுத்திக்கெங்கும்
எட்டி விட்ட விஜய்யே!
என்றும் நீ நிலைத்திட வாழ்த்துகிறேன்.

சவீர் சப்னம் பானு,
4 ஆவது டிவிஷன்,
முனைச்சேனை,
கிண்ணியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி சென்ற

**ஈரான் தானே உற்பத்தி செய்த செய்மதியொன்றை அண்மையில் விண்வெளிக்கு அனுப்பியது. எனினும், இந்த செய்மதி தனியாகப் பயணிக்கவில்லை. வெள்ளை நிற எலியொன்றையும் சின்னஞ்சிறிய ஆமையொன்றையும் புழுக்களையும் எடுத்துக்கொண்டுதான் விண்வெளிக்குச் சென்றது. ஈரான் விண்வெளி நிறுவனம் இந்த செய்மதிக்கு 'கவோஷ்கார் 3' என பெயர் சூட்டியிருந்தது. 'கவோஷ்கார்' என்பதன் அர்த்தம் 'ஆய்வாளர்' அல்லது 'ஆராய்ச்சியாளர்' என்பதாகும். ஈரானிய விஞ்ஞானிகள் நேரடியாக உயிருள்ள விலங்குகளை விண்வெளிக்கு அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். எனினும், விலங்குகளை முதன்முதலாக விண்வெளிக்கு அனுப்பியது ஈரான்தான் என நினைத்தால் அது தவறானதாகும்.**




மனிதன் விண்ணை வெற்றி கொள்வ தற்குமுன் அதற்கு வழிசமைத்துக் கொடுப்பதற்காக அங்கு பல உயிரினங்கள் அனுப்பப்பட்டுள்ளன. சிம்பன்சி எனப்படும் மனிதக்குரங்கிலிருந்து நாய்கள் வரை ஏன் மண்புழுக்கள்கூட விண்வெளிக்கு அனுப்பப்பட்டன. இவ்வாறு கடந்த காலங்களில் வெவ்வேறு உயிரினங்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மனிதன் விண்வெளியை வெற்றிகொள்வதற்கு முன் விண்வெளி ஓடத்தில் பயணிப்பது பாதுகாப்பானதா? விண்வெளியின் இயல்பு எப்படிப்பட்டது? மனிதனுக்கு விண்ணை வெற்றி கொள்ளமுடியுமா? மனிதன் விண்வெளியை வெற்றி கொள்வதில் அவனுக்குள்ள தடைகள் என்ன? போன்ற வினாக்களுக்கும் இன்னும் பல கேள்விகளுக்கும் விடை காணும் பொருட்டு பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே இந்த விலங்குகள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டன. சில விலங்குகள் விண்ணில் சென்றது மாத்திரமே. மீண்டும் பூமிக்குத் திரும்பும் சந்தர்ப்பம் அவற்றிற்கு கிடைக்கவே இல்லை. அவற்றில் சில தமது உயிர்களைத் தியாகம் செய்தது முழு மனித சமுதாயத்தின் மாபெரும் முயற்சிகளுக்கு கைகொடுப்பதற்காகும்.

அந்தவகையில், உயிரினங்களை விண்வெளிக்கு அனுப்பிய சர்வதேச விண்வெளி முகவர் நிறுவனங்கள் வெவ்வேறு நாடுகளில் காணப்படுகின்றன. அந்நாடுகளாவன ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ஜப்பான் என்பனவாகும்.

## முதன்முதலாக விண் சென்ற பழ ஈக்கள்

முதன்முதலாக விண்வெளிக்குச் சென்றவை பழ ஈக்களாகும். சோள விதைகளுடனேயே அவை சென்றன. 1947 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பாட்சார்த்த ரொக்கட்டாகிய வீ2 என்ற ரொக்கெட்டின் மூலமே இவைசென்றன. கதிர்வீச்சினால் ஏற்படும் தாக்கங்கள் எத்தகையது என்பதைக் கண்டுபிடிக்கவே அவை விண்நோக்கி அனுப்பப்பட்டன.

## விண்வெளிக்குச் சென்ற எலி

முதன்முதலாக விண்வெளிக்கு எலியை அனுப்பியது அமெரிக்காவாகும். இந்நிகழ்வு 1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி நடைபெற்றது. 'அல்பட் 5' எனும் நடவடிக்கை மூலமே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வீ2 ரொக்கட்டின் உதவியுடன் இந்த எலி 137 கிலோமீற்றர் தூரம் வரை விண்வெளியில் பயணித்தது. 1950 ஆம் மற்றும் 1951 ஆம் ஆண்டுகளில் மேலும் பல எலிகள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டன.

## அல்பட் II

அல்பட் II என்று பெயர் சூட்டப்பட்ட றீசஸ் இனக் குரங்கே முதன்முதலாக விண்வெளிக்குச் சென்ற குரங்கு என வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இது விண்வெளிக்கு 1949 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி வீ2 ரொக்கட் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அது மீண்டும் புவிக்குத் திரும்பியபோது அக்குரங்கில் இணைக்கப்பட்ட 'பெரசூட்' செயற்படாது போனதால் மரணத்தை தழுவியது.

1950 மற்றும் 1960 தசாப்தங்களில் அமெரிக்காவால் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மேலும் பல குரங்குகள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டன. விண்வெளியில் சரீரத்தின் செயற்பாடுகள் எப்படி இருக்கும் என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்காக குரங்குகளின் உடலில் தொடர்பாடல் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அமெரிக்கா அல்பட் II முதல் அல்பட் IV வரையிலான விண்வெளி ஓடங்களில் குரங்குகளை அனுப்பி பரீட்சித்துப் பார்த்தது.

## சைஜன் மற்றும் டெசிக்

1951 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாள் ஐக்கிய சோவியத் சமவுடைமைக் குடியரசானது முதன்முதலாக விண்வெளிக்கு இரண்டு நாய்களை அனுப்பியது. அவைதான் சைஜனும் டெசிக்குமாகும். அவை இரண்டுக்கும் புவியின் ஓடுபாதை (சுற்றுப்பாதை) வரையிலான உயரமளவிற்கு செல்லும் வாய்ப்பே கிடைத்தது. இவை இரண்டும் ரஷ்யாவின் ஆர்1 III ஏ-1 ரொக்கட் மூலமே விண்வெளிக்குச் சென்றன. சைஜன் மற்றும் டெசிக் இவற்றில் இரண்டில் ஒன்று பின்னர் மேற்கொள்ளப்பட்ட விண்வெளி நடவடிக்கைகளின்போது இறந்துவிட்டது.

## முதன்முதலாக புவியின் (சுற்று) ஓடுபாதைக்குச் சென்ற லைக்கா.

'லைக்கா' எனும் நாயே முதன்முதலாக புவியின் சுற்றுப்பாதையை அடைந்த உயிரினமாகும். அதனை அனுப்பியது சோவியத் ஒன்றியமாகும். லைக்காவை புவியின் சுற்றுப்பாதைக்கு அழைத்துச் சென்றது 'ஸ்புட்னிக்-2' எனும் விண்வெளி ஓடமாகும். இது 1957 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெற்றது. புவியின் சுற்றுப்பாதைக்குச் சென்ற லைக்கா அங்கேயே தனது இறுதி மூச்சை விட்டதாகக் கூறப்படுகின்றது. மனிதன் விண்வெளிக்கு செல்வதற்கு வழி சமைத்துக்கொடுத்தது 'லைக்கா' எனும் இந்த நாய்தான். அதனால், 'லைக்கா' இன்றும் சாகாவரம் பெற்று மனித மனங்களில் வாழ்கின்றது. புவியின் சுற்றுப்பாதைக்குச் சென்ற முதலாவது உயிரினம் என்ற புகழை வரலாற்றில் 'லைக்கா' பதித்துக்கொண்டது. லைக்காவுக்குப் பின் மேலும் 10 நாய்கள் விண்வெளிக்கு பல சந்தர்ப்பங்களில் அனுப்பப்பட்டன. இவ்வகையான பரிசோதனைகளின் பின் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் [illegible] ரஷ்யாவின் விண்வெளி வீரரான யூரி ககாரின் முதலாவது மனிதனாக விண்வெளிக்குப் பயணிக்கக்கூடியதாக இருந்தது.

## அமெரிக்க ராணுவத்தின் கோடோ


1958 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி ஜூபிடர் ஐ.ஆர்.பீ.எம்.ஏஎம் 13 எனும் ரொக்கெட்டை ஃபுளோரிடாவிலிருந்து விண்வெளிக்கு அனுப்பினர். இந்த ரொக்கெட்டில் பயணித்தது அமெரிக்க ராணுவத்தில் பயிற்சி பெற்ற கோடோ எனும் தென் அமெரிக்க குரங்காகும். இக்குரங்கில் இணைக்கப்பட்டிருந்த 'பெரசூட்' செயற்படாத காரணத்தால் அது பூமி திரும்பும் வழியில் ரொக்கெட்டுடன் காணாமல் போனது. இந்தப் பயணத்தின்போது 8 நிமிடங்கள் ஈர்ப்புச் சூனியப் பிரதேசத்திற்கு அக்குரங்கு வெற்றிகரமாக முகம் கொடுத்[illegible] தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு, 10,000 மைல் வேகத்தில் புவியை நோக்கி ரொக்கெட் பிரவேசிக்கும் பொழுது அதற்கும் வெற்றிகரமாக அது முகம் கொடுத்தது. 'கோடோ'வை தாங்கிச் சென்ற ரொக்கெட்டின் பகுதிகள் ஃபுளோரிடாவிற்கு அருகில் கடலில் வீழ்ந்தாலும் அதனை தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

## பெல்கா மற்றும் ஸ்ட்ரெல்கா

1960 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக்-5 என்ற விண்வெளி



'ஹெம்' எனும் மனிதக் குரங்கை அழைத்துச் சென்ற மர்க்குரி கெப்சியூல் கடலில் வீழ்ந்த சந்தர்ப்பத்தில் 'ஹெம்' குரங்கைக் காப்பாற்றியது 'யு.எஸ்.எஸ்.டொனர்' எனும் யுத்தக் கப்பலாகும். அச்சந்தர்ப்பத்தில் தன்னைக் காப்பாற்றிய மாலுமிக்கு கைகுலுக்கி தனது நன்றியை தெரிவித்த இந்த மனிதக்குரங்கின் செயல் அற்புதமான ஒரு காட்சியாக அமைந்தது.



பேரு நாட்டின் குரங்கு.



ரஷ்யாவிலிருந்து விண்வெளிக்குச் சென்ற வெட்டரொக் மற்றும் உகொலியொக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகள்



ஓடத்தின்மூலம் முதன்முதலாக ஒரு சோடி நாய்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டன. பெல்கா மற்றும் ஸ்ட்ரெக்கா என்பதே அந்த நாய்களின் பெயர்களாகும். இவை இரண்டும் மீண்டும் பூமிக்குத் திரும்பின. இந்த நடவடிக்கையின் பின் ஸ்ட்ரெல்கா புல குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு குட்டியின் பெயர் புஷிங்கா. 1961 ஆம் ஆண்டு அமெரிக்காவினதும் சோவியத் யூனியனினதும் நட்பின் அடையாளமாக அப்போதைய சோவியத் யூனியனின் பிரதமராகத் திகழ்ந்த நிக்கித்தா குருஷேவ் அவர்களால் ஐக்கிய அமெரிக்காவின் ஜ[illegible]யாகத் திகழ்ந்த ஜோன் எஃப் [illegible]ன்னடியின் மகளாகிய கெரோலினாவுக்கு இந்தப் புஷிங்கா என அழைக்கப்பட்ட நாய்க்குட்டி பரிசாக வழங்கப்பட்டது.

## ஹெம் எனும் மனிதக் குரங்கு

1961 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி 'ரெட்ஸ்டோன்' எனும் விண்வெளி ஓடத்தில் மர்க்கரி கெப்சியூல் மூலம் விண்வெளிக்கு அனுப்பிய விண்வெளிக் கலத்தில் ஹெம் எனும் மனிதக்குரங்கு இணைந்து கொண்டது. இந்த முயற்சியில் ஈடுபட்டது மர்க்கரி 'ரெட்ஸ்டோன்-2' எனும் விண்கலமாகும். இக்குரங்குக்கு மின்தாக்கங்களுக்கு முகம் கொடுக்காதபடி பயிற்சி வழங்கப்பட்டது. அதற்கு வாழைப்பழங்களை கையூட்டாக வழங்கியே இந்தப் பயிற்சியை வழங்கினர். விண்வெளியில் அதற்கு கையூட்டாக வாழைப்பழம் அடங்கிய மாத்திரை ஒன்றையே வழங்கினர். ஒவ்வொரு செயற்பாடுகளும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விண்வெளிப் பரிசோதனைகள் பூர்த்தி அடைந்த பின்னர் மர்க்கரி கெப்சியூல் விண்கலம் கடலில் வீழ்ந்தது. யு.எஸ்.எஸ் டொனர் எனும் கப்பல்தான் ஹெம் எனும் மனிதக்குரங்கை காப்பாற்றியது. அச்சந்தர்ப்பத்தில் ஹெம் கப்பலின் மாலுமிக்கு (கெப்டன்) கை குலுக்கவும் மறக்கவில்லை. 'மர்க்கரி ரெட்ஸ் டோன்' விண்கலத்தின் முயற்சி முடிந்து 3 மாதங்களின் பின்பே அமெரிக்கா அலன் ஷெப்பர்ட் எனும் விண்வெளி வீரரை விண்வெளிக்கு அனுப்பியது. இவரே அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏபல் பேக்கர் என்னும் இரு குரங்குகள்

முதன்முதலாக விண்வெளிப் பயணத்தின் பின் உயிர்பிழைக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்ற இரு குரங்குகள் தான் ஏபல் மற்றும் பேக்கர் எனும் குரங்குகளாகும். 1959 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி அமெரிக்காவின் 'ஜூபிட்டர்' எனும் வலய 'பெலெஸ்டிக் மிசைல்' ரொக்கெட் மூலமே இவை இரண்டும் விண்வெளிக்குச் சென்றன. ஏபல் அமெரிக்காவில் பிறந்த ரிஸஸ் வகைக் குரங்காகும். பேக்கர் பெரு நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட குரங்காகும். 16 நிமிடம் கொண்ட பயணத்தின் போது. இந்த இரு குரங்குகளும் மணிக்கு 16,000 கிலோமீற்றர் வேகத்திற்கு முகம்கொடுத்தன. பயணம் வெற்றிகரமாக முடிந்தாலும் தரவுகளைப் பெறுவதற்காக உடலில் பொருத்தப்பட்ட இலத்திரனியல் சாதனத்தை சத்திர சிகிச்சை மூலம் கழற்ற முற்பட்ட வேளையில் ஏபல் மரணமடைந்தது. எனினும், இதன் இணைக் குரங்கான பேக்கர் 1984 வரை உயிர் வாழ்ந்தது.



'லைக்கா' எனும் நாய்.

## ஈனோஸ் எனும் மனிதக் குரங்கு

1961 நெவொம்பர் 29 ஆம் நாள் புவியின் சுற்றுப்பாதையை அடைந்த முதலாவது மனிதக் குரங்குதான் ஈனோஸ். அது 'அட்லஸ் 5' ரொக்கெட் மூலமே பயணித்தது.

## வெட்டரொக் மற்றும் உலொலியொக்


ரஷ்யாவின் வொஸ்கோட் செயற்றிட்டத்தின்கீழ் இரு நாய்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டன. இது 1966 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நடந்தேறியது. அவைதான் வெட்டரொக் மற்றும் உலொகியொக் எனும் பெயர்களைக் கொண்ட இரு நாய்களாகும். 'கொஸ்மொஸ் 110' எனும் விண்கலத்திலேயே அவை பயணித்தன. 22 நாட்கள் புவிச் சுற்றுப்பாதையில் இருந்துவிட்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி மீண்டும் புவிக்குத் திரும்பின. இவை அதிக காலம் புவிச் சுற்றுப்பாதையில் தங்கியிருந்து சாதனையை நிகழ்த்திய உயிரினமாகக் கருதப்பட்டது. எனினும், மனிதன் 1974 ஆம் ஆண்டு 'ஸ்கைலாப்-2' விண்வெளி ஓடத்தில் சென்று விண்வெளி நிலையத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்து இச்சாதனையை முறியடித்தான்.

(அ)





1959 இல் விண்வெளிக்குச் சென்ற சேம்.



விண்வெளியில் சிலந்திக் கூடு.




விண்வெளிக்குச் சென்ற உயிரினங்களை நினைவு கூருமுகமாக சோவியத் ஒன்றியம் வெளியிட்ட நினைவு முத்திரைகளில் சில.






விண்வெளிக்கு மாத்திரமல்ல சந்திரனுக்கும் சென்று வந்த டின்டின் எஜமானருடன் செல்லப்பிராணியாக சென்ற ஸ்நோவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு:** இஸ்லாமிய முடியரசு.

**அமைப்பு:** 1744 இல் முதலாம், 1824 இல் இரண்டாம், 1926 இல் மூன்றாம் சவுதி அரசு பிரகடனம் செய்யப்பட்டது.

அடையாளப்படுத்தப்பட்டது - 1927 மே 20 ஆம் திகதி.

ஐக்கிய அரசு உதயமானது - 1932 செப்டெம்பர் 23 ஆம் திகதி.

**தேசிய பெயர்:** அல்-மம்லகா அல்-அரேபியா அஸ்-சவுதியா (சவுதி அரேபிய ராச்சியம்)

**மன்னர்:** அப்துல்லா பின் அப்துல் அஸீஸ்.

**மொழி:** அரபு.

**இனங்கள்:** அரேபியர் 90%, ஆசியர் 10%.

**சமயம்:** இஸ்லாம் 100%.

**எழுத்தறிவு** (2003): 79%.

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** 966.

**தேசிய சின்னங்கள்:** **மரம்**-பேரீச்சை, **பறவை**-ராஜாளி, **மிருகம்**-ஒட்டகம், **விளையாட்டு**(பிரபல்யமானது)- கால்பந்து; மலர் பிரகடனப் படுத்தப்படவில்லை.



மன்னர்



முதலாவது முடிக்குரிய இளவரசர்




ரியாத் நகரின் ஒருபக்கத் தோற்றம்

**முதலாவது முடிக்குரிய இளவரசர்:** சுல்தான் பின் அப்துல் அஸீஸ்.

**இரண்டாவது முடிக்குரிய இளவரசர்:** நயீஃப் பின் அப்துல் அஸீஸ்.

**சட்டசபை:** அமைச்சர்கள் பேரவை (மன்னரால் நியமிக்கப்படும்).

## தரைத்தோற்றம்

அதிகளவு மணல் பாலைவனங்களைக் கொண்ட நாடாகும். உலகின் மிகப்பெரிய மணல் பாலைவனங்களில் ஒன்றான 'ரப்-அல்-காலி' இங்குதான் அமைந்துள்ளது. தவிர, 100 அடி உயரமான மணற்குன்றுகள், மலைகள் என்பனவும் காணப்படுகின்றன. மலைத்தொடர்களில் 'ஹிஜாஸ்' வடமேற்கிலும் 'அஸீர்' தென்மேற்கிலும் அமைந்துள்ளன.



தேசிய நூதனசாலை

பெரும்பாலான பெற்றோலியப் படிவுகள் கிழக்கு மாகாணத்தின் பாரசீக வளைகுடாவுக்கு அண்மையில் காணப்படுகின்றன.

**எல்லைகள்: மேற்கு:** செங்கடல்;
**வடக்கு:** ஜோர்தான், ஈராக், குவைத்;
**கிழக்கு:** பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபுக் குடியரசுகள்,
**தெற்கு:** தென் ஓமான், வட ஓமான்.

**மொத்த நிலப்பரப்பு:** 829,995 சதுர மைல் (2,149,690 ச.கி.மீ).

**நிலப்பிரிவுகள்:** 13 மாகாணங்கள்.

**உயர் மலைச்சிகரம்:** ஜபல் சவ்தா-10,279 அடி (3133 மீற்றர்):


**தாழ் மையம்:** பாரசீகக் குடா.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ரியாத்;

**ஏனைய பெரிய நகரங்கள்:** ஜித்தா, மக்கா.

**மக்கள் தொகை:** 28,686,633.

**நாணயம்:** ரியால்.



மக்காவிலுள்ள புனித கஃபா

## தேசிய கீதம்

Sar i lel-majd-i wa l-alya,
Majjedu le-Khaleq as-Sama'!
W-arfa i al-khaffaq al-akhdar
Yahmil an-Nur al-musattar….என ஆரம்பிக்கின்றது.

## வரலாறு

சவுதி அரேபியாவானது அரேபிய மக்களினதும் இஸ்லாம் மதத்தினதும் தாயகமாகத் திகழ்கின்றது. இது 1517 இல் ஒட்டோமன் துருக்கிய சக்கரவர்த்திகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. 18 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வெவ்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. 1745 இல் முஹம்மது இப்ன் அப்த் அல்-வஹாப் இஸ்லாமிய மார்க்கத்தைப் புனிதப்படுத்தும் 'வஹாபி' இயக்கத்தை ஆரம்பித்தார். 1818 இல் வஹாபியர்கள் ஒட்டோமன் துருக்கியருக்கெதிராகப் போராடி, தமது அதிகாரத்தை நிலைநாட்டினர். 1913 இல் இப்ன் சவுத் சுதந்திர சவுதி அரேபியாவை உருவாக்கினார்.

## கலாசாரம்

அரேபிய மற்றும் இஸ்லாமிய கலாசாரத்தின் மையமாக சவுதி அரேபியா திகழ்கின்றது. மரியாதைக்குரிய உடைகள் அணிவதும் ஒழுக்கக்கட்டுப்பாடும் சிறப்பாக அமுல்படுத்தப்படுகின்றது.

## காலநிலை

வருடம் முழுவதும் அதிக வெப்பத்துடன் வறண்ட காலநிலை நிலவுகின்றது. இங்கு மிகச் சொற்ப அளவு மழைவீழ்ச்சியே கிடைக்கும். குறுகிய காலத்துக்கு (டிசம்பர் முதல் பெப்ரவரி வரை) குளிர்ச்சியான காலநிலை நிலவும்.

# சவுதி அரேபியா






## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2002): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் தொகை:** 3.9 மில்லியன்.

**செல்லிடத் தொலைபேசிகள்:** 2.9 மில்லியன்.

**வானொலி நிலையங்கள்** (1998): AM 43, FM 31, SW 2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 117. **இணையத்தள வழங்குனர்கள்** (2003): 22. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 1.453 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகளின் மொத்த நீளம்:** 1392 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** மொத்தம் 151470 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** அல் தமாம், அல் ஜுபைல், தூபா, ஜித்தா, ஜிஸான், ரரபிக், ராஸ் அல்-காஃப்ஜி, மிஷாப், யான்பு அல் பஹ்ர், மதீனத் யான்பு அல் சினையாஹ். **விமான நிலையங்கள்** (2002): 209.

## பொருளாதாரம்

**விவசாயம்** (விவசாய நிலம் 2%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோதுமை, பார்லி, தக்காளி, முலாம்பழம், பேரீச்சை, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, முட்டைகள், பால்.




**தொழிலாளர் தொகை** (1999): 6.76 மில்லியன். (குறிப்பு: மொத்த சனத் தொகையில் 35% மானோர் வெளிநாட்டவர்கள் ஆவர்).

**வேலையற்றோர்:** 13%.

**கைத்தொழில்கள்:** மசகு எண்ணெய் தயாரிப்பு, பெற்றோலிய சுத்திகரிப்பு, அடிப்படை ரசாயனப் பொருட்கள், சீமெந்து, பிளாஸ்டிக் பொருட்கள், வர்த்தக கப்பல்கள் மற்றும் விமான பழுதுபார்ப்பு. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, இரும்புருக்கு, தங்கம், செம்பு.




தேசிய இலச்சினை

**ஏற்றுமதிகள்:** பெற்றோலியம் மற்றும் பெற்றேலிய உற்பத்திகள், **இறக்குமதிகள்:** இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், உணவுப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள், புடைவைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, சீனா, தாய்வான், சிங்கப்பூர், ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

* மக்கா, மதீனா
* ரியாத் தேசிய நூதனசாலை
* ரியாத் தேசிய விலங்கினக்காட்சிசாலை
* ரவ்தத் அல்-சவ்த்
* அல்-முஸ்மக் கோட்டை
* சுஜப் பாதெரன் பள்ளத்தாக்கு
* அல்-முரப்பா மாளிகை
* மன்னர் அப்துல் அஸீஸ் ராணுவ நூதனசாலை
* அல்-மக்தபா பூங்கா.



எண்ணெய் அகழ்வு மற்றும் சுத்திகரிக்கும் நிலையமொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பாடசாலையை பாதுகாப்பானதாக மாற்றுங்கள்

நீங்கள் ஏன் பாடசாலைக்குச் செல்கிறீர்கள்? என யாராவது உங்களிடம் கேட்டால் நீங்கள் அளிக்கும் ஒரே பதில் "நன்றாகப் படிப்பதற்கு" என்பதாகும். நன்றாகப் படிப்பது என்றால் பாடப்புத்தகத்தில் உள்ள விடயங்களை மட்டும் படிப்பதல்ல. நமது பழக்கவழக்கங்கள், பாரம்பரியம், ஒழுக்கம் என்பனவற்றையும் கற்கவேண்டும். நம்மிடம் மறைந்துள்ள திறமைகளையும் வெளிப்படுத்தவேண்டும். நாம் காலையில் வீட்டிலிருந்து நமது நல்வாழ்விற்கு வழிகாட்டும் பாடசாலைக்குச் செல்கிறோம். எமது பெற்றோரிடமிருந்து பிரிந்து, வேறு பெற்றோர்களிடம் செல்கிறோம். எமக்கு சிறந்த குண இயல்புகளுக்கான வழிகாட்டியாக பாடப்புத்தகத்திலுள்ள விடயங்கள் உதவுவது போலவே நல்ல பாதுகாப்பும் பாடசாலை அன்னையின் நிழலில் கிடைக்கவேண்டும். அதற்காக செயல்பட வேண்டிய அல்லது மேற்கொள்ளவேண்டிய விடயங்கள் பல உள்ளன.

## பாடசாலையின் பாதுகாப்பு வேலி



பாதுகாப்பு வேலி ஒவ்வொரு பாடசாலைக்கும் மிக அத்தியாவசியமானதாகும். இப்பாதுகாப்பு வேலியின் காரணமாக வெளியார் இலகுவாகப் பாடசாலைக்குள் நுழைவது தவிர்க்கப்படுகின்றது. சிறு பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வெளியே செல்வதைத் தவிர்ப்பதற்கும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் இது பிரதான தேவையாக அமைகின்றது. அத்துடன், பாடசாலை மாணவர்கள், கட்டடங்கள், பொருட்கள், மரஞ்செடிகொடிகள் என்பனவற்றின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது.




## உபகரணங்களைப் பயன்படுத்தும் பொழுது

விஞ்ஞான உபகரணங்களையும் ரசாயனத் திரவங்களையும் பயன்படுத்தும்பொழுது மிக அவதானமாக இருக்கவேண்டும். இவற்றை எவ்வாறு அவதானமாக கையாளவேண்டும் எனும் முறைகள், அறிவுறுத்தல்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். விவசாய விஞ்ஞான விடயத்தைப் பொறுத்தவரையில் மண்வெட்டி, முள், கத்தி, வீச்சுக்கத்தி, கடப்பாறை உள்ளிட்ட பல விவசாய உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த உபகரணங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்றும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றிய அறிவுறுத்தல்களையும் களஞ்சிய அறையில் காட்சிக்கு வைக்கவேண்டும்.

## விபத்துக்கள் நேரிடக்கூடிய இடங்களை அடையாளப்படுத்தல்




பாடசாலையிலுள்ள விபத்துக்கள் நிகழக்கூடிய அபாயகரமான பல இடங்களை இலகுவாக அடையாளப் படுத்திக் கொள்வதற்காக 'ஸ்டிக்கர்' ஒட்டும் முறையைப் பின்பற்ற வேண்டும்.


இதன்கீழ் மின் அலகு மீற்றர், (வாயு அடுப்பு) கேஸ் அடுப்பு மலசலகூடக் குழி, தேங்காய் விழக்கூடிய தென்னை மரங்கள் ஆபத்தை விளைவிக்கக் கூடிய வாய்க்கால் என்பனவற்றில் ஆபத்தை முன்கூட்டியே எச்சரிக்கும் சமிக்ஞைகளைக் காட்சிப்படுத்தி வைக்கவேண்டும்.

## டெங்கு, சிக்குன் குன்யா போன்ற நோய்கள்



ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் 1/2 மணிநேரம் நுளம்புகள் பெருகும் இடங்களை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தி நோய்கள் வராம்ல் தடுக்கவேண்டும். அதேபோல் வகுப்பு மட்டத்தில் அல்லது பாடசாலை மட்டத்தில் கூட்டம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு இந்நோய்களைப் பற்றி அறிவூட்டுதல்வேண்டும்

## பாடசாலையின் பிரதான வாசல்



ஒரு பாடசாலைக்குப் பிரதான வாயில் ஒன்று அவசியமாகும். அது நிரந்தரமான வாயிலாக (Gate) இருக்கவேண்டும். அதன்மூலம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. பாதுகாப்பான பாடசாலை சூழல் ஒன்றை உருவாக்கி [illegible] அத்தியாவசியமானதாகும்.



# நீர் சிகிச்சை

உடல் இளைப்பது முதல் புற்றுநோய் பாதிப்பு குறைவது வரை செலவே இல்லாத மருந்து நீர் சிகிச்சைதானாம்.

ஏதோ உணவு, சிற்றுண்டி சாப்பிடும்போது மட்டும் நீர் அருந்துவது போதாது. நீர் அருந்துவதை நாம் பழக்கப்படுத்தவேண்டும். நீர் தொடர்பான பழங்கள், காய்கறிகளை அதிகம் சேர்க்கவேண்டும். என்னதான் உடற்பயிற்சி செய்தாலும் டொனிக் சாப்பிட்டாலும் உடல் எடை குறையாது. ஆனால், தொடர்ந்து நீர் அருந்திவந்தால் ஒரு மாதத்திலேயே பயன் தெரிந்துவிடும். ஒருநாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் வரை நீர் அருந்தலாம். அப்பிள்,தோடம்பழம் என்று பழங்களாகவும் சாப்பிடலாம். அவற்றில் 70 சதவீதம் வரை நீர் சத்துதான் உள்ளது. தினமும் ஏதாவது ஒருவேளை மட்டும் பழங்களாக சாப்பிட்டால் மிகவும் நல்லதாம்.

## தீயணைக்கும் உபகரணமும் ஆபத்தை முன்கூட்டியே எச்சரிக்கும் குரல் நாடாவும்



திடீரெனத் தீப்பற்றிக்கொண்டால் அதற்குத் தீர்வாக தீயை அணைக்கவும் மாணவர்களைக் காப்பாற்றவும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தீயை அணைக்க தீயணைக்கும் உபகரணமும், அவசர நிலை தோன்றினால் மாணவர்களை உடனடியாக ஏதாவது பாதுகாப்பான ஓரிடத்திற்கு அப்புறப்படுத்தவோ, ஒன்றுசேர்க்கவோ ஒலிபெருக்கியொன்றும் குரல் நாடாவும் அவசியமானதாகும். இதன்மூலமாக ஆபத்தான சந்தர்ப்பங்களில் சகலரையும் அதிலிருந்து காப்பாற்றலாம்.

## அவசர சந்தர்ப்பங்கள்



சகல வகுப்புகளிலும் முதலுதவிப் பெட்டிகள் கட்டாயம் வைக்கப்பட்டிருக்கவேண்டும். மனையியல் பிரிவின்மூலம் வைத்திய சிகிச்சைக்குரிய அறையொன்றை எப்பொழுதும் பயன்படுத்தக்கூடிய விதத்தில் தயாராக ஏற்பாடு செய்து வைத்திருக்கவேண்டும்.அவசர சந்தர்ப்பங்களில் பாடசாலைக்கு அருகில் உள்ள வைத்தியரின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பாதுகாப்புக்குழு

பாடசாலையில் இரவு காவல் சேவையும் பாதுகாப்புக் குழுவும், வீதி-வாகன ஒழுங்கமைப்புப் பிரிவும் இருக்கவேண்டும். இது மாணவர்களின் பாதுகாப்புக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். இவை திறம்படச் செயல்பட்டால் பாடசாலைக்குள் அநாவசியமாக எவரும் நுழைய வாய்ப்பிருக்காது. அத்துடன், வீதி-வாகன ஒழுங்கமைப்பை ஏற்படுத்துவதன்மூலம் வீதியில் நிகழும் போக்குவரத்து நெரிசல்களையும் வாகன விபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II (கடந்த வாரத் தொடர்ச்சி....)

பெயர் : ................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

★ *25 முதல் 29 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.*


குப்பை மேனி, ஆமணக்கு, துளசி, வல்லாரை, அலரி



25. .................... 26. .................... 27. .................... 28. .................... 29. ....................


★ *30 முதல் 34 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட நட்சத்திரக் கோலங்களின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.*

கார்த்திகை, விருச்சிகம், பெருநாய், சிறுகரடி, இடபம்





30. .................... 31. .................... 32. .................... 33. .................... 34. ....................

35. கூட்டுக 1/4 +1/8 = ....................................

36. 

நிழற்றிய உருவின் பரப்பளவு யாது?
(ஒரு சிறிய சதுரத்தின் ஒருபக்க நீளம் 2cm எனக் கொள்க)
..........................................................................

37. 
இத்திண்ம உருவின் முகங்கள் எத்தனை?
..............................

38. 

இவ் உருவின் சுற்றளவு யாது?
..............................

39. 884 மாம்பழங்கள் 13 கூடைகளில் சமமாக இடப்பட்டால், ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் தொகை யாது?..........................................

40. நீர்த்தாங்கி ஒன்றில் 7l 550ml நீர் உள்ளது. இதனை 1l 250ml கொண்ட சிறிய நீர்த்தாங்கிகளில் நிரப்பும்போது, 50ml நீர் வீண் விரயமாகிவிட்டது ஆயின், நிரப்பப்பட்ட சிறிய தாங்கிகளின் தொகை யாது? ..........................................

41. 07:45 மணிக்கு புறப்படும் பேருந்து 20:00 மணிக்கு கண்டியை அடைந்தால், சென்றடைய எடுத்த நேரம் யாது?..........................................

42. 15m துணியில் இருந்து 45 துண்டுகள் வெட்டலாம் ஆயின், 75m துணியில் இருந்து எத்தனை துண்டுகள் வெட்டலாம்?..........................................

43. A யில் இருந்து E வரையான மிகக்குறுகிய தூரம் எத்தனை km ஆகும்?
..........................................

★ *கீழே தரப்பட்டுள்ள அடிப்படையில் 44 முதல் 45 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.*

| இல்லம் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| வள்ளுவர் | 15 | 13 | 20 |
| கம்பர் | 20 | 30 | 25 |

பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி ஒன்றில் இரண்டு இல்லங்கள் பெற்றுக்கொண்ட இடங்களின் எண்ணிக்கை அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

44. முதலாம் இடம் ஒவ்வொன்றிற்கும் 10 புள்ளிகளும், இரண்டாம் இடம் ஒவ்வொன்றிற்கும் 8 புள்ளிகளும், மூன்றாம் இடம் ஒவ்வொன்றிற்கும் 5 புள்ளிகளும் வழங்கப்பட்டால், அதிகூடிய புள்ளிகளைப் பெறும் இல்லம் எது?..............................


45. இரு இல்லங்களிலும் முதல் இடத்தைப்பெற்ற ஒவ்வொரு வீரருக்கும் ரூபா 185.00 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டதாயின், மொத்தப் பரிசில்களின் பெறுமதி யாது?
..........................................

★ *46 முதல் 50 வரையான வினாக்களுக்குத் தரப்பட்ட தகவல்களைக்கொண்டு விடை எழுதுக.*

| பாடசாலை | மாணவர்கள் தொகை | மாணவர்கள் குறைவடைவு | மாணவர்கள் அதிகரிப்பு |
|---|---|---|---|
| A | 45 | 10 | - |
| B | 38 | - | 2 |
| C | 23 | 3 | - |
| D | 36 | 1 | - |




46. வருட இறுதியில் ஒவ்வொரு பாடசாலையிலும் காணப்பட்ட மொத்த மாணவர் தொகையை வரைபில் குறித்துக் காட்டுக.




47. ஆகக்கூடிய மாணவர்கள் கற்கும் வகுப்பைக்கொண்ட பாடசாலை எது?
..........................................

48. வருட இறுதியில் நான்கு பாடசாலைகளிலும் குறைவடைந்த மாணவர்களின் தொகை யாது?
..........................................

49. வருட இறுதியில் சம அளவு மாணவர்களைக்கொண்ட பாடசாலைகள் எவை?
..........................................

50. வருட இறுதியில் A, B, C, D ஆகிய பாடசாலைகளில் காணப்பட்ட மொத்த மாணவர்களின் தொகை யாது?
..........................................

51. அன்று பாடசாலை விடுமுறை நாள் ஆகும். நானும் நண்பர்களும் சிறுவர் பூங்காவிற்குச் சென்றோம்.......
இதைத் தொடர்ந்து அங்கு கண்ட காட்சிகளை அடிப்படையாகக்கொண்டு ஆறு வாக்கியங்க்ளை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை இயைபு சரியாகவும் நான்கு சொற்களுக்குக் குறையாமலும் அமைதல் வேண்டும்.
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

## வினாத்தாள் II இன் விடைகள்

***(பெப்ரவரி 03, 10 ஆகிய திகதிகளில் பிரசுரமானவை)***

**01.** i. *இன்றைய* ii. *வீடு வாசல்கள்*
iii. *ஏறத்தாழ/ஏறக்குறைய/கூடக்குறைய*
iv. *பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்படும்* v. *மழை பெய்து வருவதால்*
vi. *கிறீன்லைட்* vii. *விட்டன* viii. *மக்கள்*
ix. *ஆழ்ந்தனர்* x. *மண்சரிவு/பாரிய வெள்ளப்பெருக்கு*

**02.** (i) *அதிபர் வகுப்பறையை பார்வையிட வந்தார்.*
(ii) *நாங்கள் தெருவோரமாக நடந்து சென்றோம்.*

**03.** (i) *இராட்சியங்களாகப்* (ii) *திறப்பால்*

**04.** (i) *பிழை செய்தவனை விடுத்து வேறு ஒருவன் தண்டிக்கப்படல்*
(ii) *மறைந்து வாழுதல்*

**05.** (i) *பிறந்தநாள் வாழ்த்துக்கள்* (ii) *நீடூழி காலம் வாழ்க*


**06.** (i) *நான் உள்ளே வரலாமா?* (ii) *நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்?*

**07.** (i) *மம பாசல(ட்)ட கியா/மம இஸ்கோலெட கியா* (ii) *எஹே யன்ன*

**08.** (i) Come here (ii) Please go there


**09.** (i) **10.** (ii) **11.** (i) **12.** (iii) **13.** (i) **14.** (i)
**15.** (i) **16** (ii) **17.** (i) **18.** (iii) **19.** (iii) **20.** (iii)
**21.** (ii) **22.** (ii) **23.** (i)

**24.**



**25.** *ஆமணக்கு* **26.** *குப்பைமேனி* **27.** *அலரி* **28.** *துளசி*
**29.** *வல்லாரை* **30.** *பெருநாய்* **31.** *கார்த்திகை* **32.** *விருச்சிகம்*
**33.** *இடபம் (ரிஷபம்)* **34.** *சிறுகரடி* **35.** *2/8 + 1/8 = 3/8*
**36.** *16 சதுர சென்ரிமீற்றர்* **37.** *5* **38.** *23*cm **39.** *68*
**40.** *6* **41.** *12 மணித்தியாலம் 15 நிமிடங்கள்*
**42.** *225 துண்டுகள்* **43.** *18*km **44.** *கம்பர்*
**45.** *ரூபாய் 6475.00*

**46.**





**47.** B *பாடசாலை* **48.** *14* **49.** A, D
**50.** *130 மாணவர்கள்*
**51.** *(ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை இயைபு சரியாகவும் நான்கு சொற்களுக்குக் குறையாமலும் அமைதல் வேண்டும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகை வகையாய் வயல் சித்திரங்கள்

'நெல் விளைச்சலில் வீழ்ச்சி-விவசாயிகள் திண்டாட்டம்-அரிசி விலையேற்றம்' இவ்வாறு நெல் விளைச்சல் தொடர்பிலான செய்திகளை அண்மைக்காலங்களில் செவிமடுக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலை நம் நாட்டில் மட்டுமன்று; ஜப்பான், கம்போடியா, சீனா, பங்களாதேஷ் என நெற் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும் பல்வேறு நாடுகளிலும் காலத்துக்குக் காலம் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளாகவே இவை இருக்கின்றன.

எனினும், இந்தப் பிரச்சினையை ஜப்பானியர்கள் வயல் சித்திரங்களினூடாக வித்தியாசமான முறையில் தீர்த்து வருகின்றனர். ஜப்பானின் இனாகாடேட் மற்றும் யொனேஸவா கிராம விவசாயிகளே இந்த சாதனையைப் புரிந்துள்ளனர். அந்த வகையில், ஜப்பானில் வீழ்ச்சி கண்ட நெல் விளைச்சலை தலைநிமிர்த்துவதில் 'வயல் சித்திரங்கள்' கைகொடுத்தன.அது என்ன 'வயல் சித்திரங்கள்...' என்று சிந்திக்கிறீர்களா?









நம் நாட்டில் பல அரிசி ரகங்கள் இருப்பது போலவே, ஜப்பானில் கொடைமை,சுகாரு என அரிசி ரகங்கள் உள்ளன. இதில் 'கொடைமை' அரிசியின் நெற் கதிர்கள் ஊதா மற்றும் மஞ்சள் நிறத்திலானவை. 'சுகாரு' ரக அரிசியின் நெற்கதிர்களோ பச்சை நிறத்திலானவை. பல்வேறு நிறங்களிலான இந்த நெற்கதிர்களை ஒன்றாகப் பயிரிட்டு, வயல் நிலங்களை வண்ணமயமாக மாற்றியுள்ளனர் இந்தக் கிராம மக்கள்.

## ஜப்பான் விவசாயிகள் சாதனை!

இதற்காக முதலில் கணினியின் உதவியுடன் உருவங்களை வடிவமைத்து, நெல் நாற்றுக்களை எவ்வாறு நாட்ட வேண்டும் என்பது குறித்துத் திட்டமிட்டனர். அதன்படி; ஜப்பான் நாட்டு போர் வீரர், பொம்மை, மான், தவளை, தும்பி என பல்வேறு உருவங்களில், பல வண்ண நெற்கதிர்களைக் கலந்து வயல்வெளிகளில் நாற்றுக்களை நாட்டினர். நான்கே மாதங்களில் அவை வளர்ந்து அந்த உருவங்கள் தத்ரூபமாக வெளிப்படுவதை அவதானித்தனர். இதனை வெற்றிகரமாக்குவதற்கு விவசாயிகளுக்கு கிராமிய மக்களினதும் விவசாய அதிகாரிகளினதும் உதவிகள் கிடைத்தன.

வருடாவருடம் வயல்வெளிகளில் நாற்றுக்கள் நடப்படும் வடிவங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. 1993 ஆம் ஆண்டில் 'வயல் சித்திரம்' எனும் தொனிப்பொருளில் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் 9 வருடங்கள் கிராம விவசாயிகள் தமது சேனைப் பயிர்ச்செய்கைகளின்போது இலகு வடிவங்களில் இத் திட்டத்தை பரீட்சித்துப் பார்த்தனர். அது வெற்றியடைந்ததை தொடர்ந்து, பாரிய வயல் நிலங்களில் பல வண்ண நாற்றுக்களை நாட்டி பெரிய உருவங்களை உருவாக்கினர்.

நாளடைவில் இந்த வயல் சித்திரங்களுக்காகவே அந்தக் கிராமங்கள் மக்களிடையே பிரபல்யமாகின. இதனைப் பார்ப்பதற்காகவே உல்லாசப் பயணிகள் இங்கு படையெடுக்கலாயினர். இதனால், ஒருபுறம் வீழ்ச்சியடைந்த விவசாயம் தலைநிமிர்ந்தது. மறுபுறம் வியாபாரம் களைகட்டியது. -ஜீநு



**உரிய காலத்தில் செய்யவேண்டியதைத் தள்ளிப்போட வேண்டாம். தாமதத்தால் தீய முடிவுகளே ஏற்படும்.**

**ஷேக்ஸ்பியர்**



## வரலாற்றுக் கப்பல்

**அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து கடற்பரப்பிலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க கப்பலொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'AHS Centaur' என்ற பெயரிலான இக்கப்பல், இரண்டாம் உலகப் போரின்போது அவுஸ்திரேலியா சார்பில் வைத்திய கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.**



**இது 1943 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி ஜப்பானின் நீர்மூழ்கிக் கப்பலொன்றினால் மூழ்கடிக்கப்பட்டது. அப்போது இக்கப்பலில் பயணித்த 332 பேரில் 64 பேரை மாத்திரமே உயிருடன் மீட்க முடிந்துள்ளது. கடலில் மூழ்கடிக்கப்பட்ட இந்தக் கப்பலை அவுஸ்திரேலியக் கடற்படையினர் பல ஆண்டுகளாக ஆழ்கடலில் தேடியபோதும், அண்மையில்தான் அது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

## விஜய் அதிரடி அலசல்

உங்களுக்கும் வாய்ப்பு

- வாசகர்களின் பங்களிப்புடன் வீறுநடை போடவுள்ளான் உங்கள் 'விஜய்'
- அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் உட்பட மாணவர்களும் தங்களது கருத்துக்களை முன்வைக்கலாம்.

வாசகர் பெயர்: ..........

முகவரி/மாவட்டம்: ..........

தொ.பே.இல: ..........

தரம்: ..........

பாடசாலை: ..........

| பக்கங்கள் | விரும்பி வாசிக்கின்ற/ தேவையென எதிர்பார்க்கும் பகுதி | மாற்றம் ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கும் பகுதி |
|---|---|---|
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6-7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12-13 | | |
| 14 | | |
| 15 | | |
| 16 | | |
| 17 | | |
| 18 | | |
| 19 | | |
| 20 | | |
| 21 | | |
| 22 | | |
| 23 | | |
| 24 | | |

- உங்கள் கணிப்பில் புள்ளடியிடுக.
- 'விஜய்' பற்றிய உங்கள் கருத்து: ..........

..........

..........

- இப்பகுதியை நிரப்பி 12.03.2010 இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும்.
- 'விஜய்'யில் மேலதிகமாக உள்ளடக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் விடயங்கள்:

1. ..........
2. ..........
3. ..........
4. ..........
5. ..........

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**'விஜய்' அதிரடி அலசல், த.பெ இல: 2037 கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் வழியே பயணி
# பயணிகள் கப்

**தரை, நீர், ஆகாய மார்க்க போக்குவரத்துச் சேவைகள் உலகளவில் படிப்படியாக பாரிய முன்னேற்றத்தை அடைந்து வருகின்றன. மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் இவை பெரிதும் துணை புரிகின்றன. இதில் தரைவழிப் போக்குவரத்து முறையும் நீர்வழிப் போக்குவரத்து முறையுமே உலகளவில் மிகவும் தொன்மையான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளன. அந்தவகையில், நீர்வழிப் போக்குவரத்து முறையில் அன்றிலிருந்து இன்றுவரை பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்ற 'பயணிகள் கப்பல்கள்' குறித்து எமது கண்ணோட்டத்தை செலுத்துவோம்.**

## பயணிகள் கப்பல்களை வகைப்படுத்தல்

பயணிக்கக்கூடிய பயணிகள் எண்ணிக்கை, கப்பலில் உள்ள வசதிகள் மற்றும் கப்பலின் நட்சத்திர அந்தஸ்து என்பனவற்றைப் பொறுத்து பயணிகள் கப்பல்கள் வகைப்படுத்தப்படுகின்றன. நட்சத்திர அந்தஸ்துக்கு உட்படாத சொகுசு வசதிகள்கொண்ட பயணிகள் கப்பல்களும் உள்ளன.

சில பயணிகள் கப்பல்கள் நட்சத்திர தர ஹோட்டலைப் போன்றிருக்கும். கப்பலுக்குள் பிரவேசித்தவுடன் அது கடலில் மிதக்கும் கப்பல் என்று கருத முடியாதளவுக்கு அதன் உள்ளடக்கங்களும் வசதிகளும் அமைப்பும் அமைந்திருக்கும்.

ஒருசில பொருட்களைக் காவிச்செல்லக் கூடிய வகையில் வடிவமைக்கப்படும் பயணிகள் கப்பல்களும் உள்ளன. அண்மைக்காலம் வரையில் இவ்வகையான கப்பல்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. இவற்றில் தபால் பொதிகள், தபால் பொருட்கள் மற்றும் ஒருசில அத்தியாவசியப் பொருட்களும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.இதற்கேற்ப பொருட்களை ஏற்றி-இறக்கக்கூடிய வசதிகளும் இவற்றில் உள்ளன. அத்துடன், முற்காலத்தில் நிலக்கரியில் இயங்கும் கப்பல்களும் பாவனையில் இருந்துள்ளன. யுத்த சூழல் நிலவிய காலங்களில் பயணிகள் கப்பல் கடற்படையினர் போக்குவரத்து செய்யும் கப்பல்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## நினைவுச் சின்னங்கள்

கப்பல் ஒன்று துறைமுகத்தினுள் மேற்கொள்ளும் கன்னிப் பயணத்தின் போது, அதனை நினைவிற்கொள்ள அக்கப்பலின் தலைமையாளரும் துறைமுக அதிகாரிகளும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக்கொள்வர். இவ்வாறு வழங்கப்படும் நினைவுச் சின்னங்கள் கப்பலில் வைத்துப் பேணப்படுகின்றன.

## வழிகாட்டிகள்

அதிநவீன மற்றும் சொகுசுப் பயணிகள் கப்பல்களின் போக்குவரத்துப் பாதைகள் தானியங்கி ஓட்டுநர் அமைப்பு (Auto Pilot System) மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இது செய்மதி தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

## ஃபெரி போட் (Ferry Boat)

இது அளவில் சிறியதாகும். ஒருநாள் பயணம் மற்றும் குறுகிய தூரப் பயணத்திற்கே இந்த ரகத்திலான படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. பயணிகளைத் தவிர, ஓரிரண்டு வாகனங்களை காவிச்செல்லக்கூடிய வசதியும் இதற்குண்டு.

## Dulos கப்பல்

பயணிகள் கப்பலாகப் பயன்படாத போதும் சிறப்பான ஒரு கப்பலாக அடையாளப்படுத்தப்படும் Dulos கப்பல், உலகில் பிரபல்யம் வாய்ந்ததாகும். சமுத்திரத்தில் மிதக்கும் பாரிய ஒரு நூலகமாக இது சிறப்பித்துக் கூறப்படுகின்றது. Dulos கப்பல் ஒரு முறை இலங்கைக்கும் வருகை தந்துள்ளது.

பல நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் சுயவிருப்பின் பேரில் இந்தக் கப்பலில் பணியாற்றுகின்றனர். உலகில் உள்ள அனைத்து நூல்களும் இங்கு விற்பனை செய்யப்படுவதோடு, காட்சிக்கும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, நூலக பயிற்சிப் பட்டறைகளும் இங்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

## Ocean Liner கப்பல்கள்

மிகவும் சம்பிரதாயபூர்வமான பயணிகள் கப்பல் என்று இதனைக்



பயணிகள் கப்பலொன்றில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் துறைமுகத்திற்குள் வருகின்றனர்.




உலகெங்கும் பயணிக்கும் Dulos கப்பலின் ஒரு பகுதி.



கன்னிப் பயணத்தை குறிக்கும்முகமாக நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன.



### பயணிகள் கப்பலில் உள்ள பிரதான பகுதிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ிக்கும் ப்பல்











கூறலாம்.

இந்த ரக கப்பல்கள் கால அட்டவணையின் அடிப்படையில், உலகின் சில குறிக்கப்பட்ட கடல் பாதைகளைக் கடந்து-துறைமுகங்களை அடைந்து-பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. எனினும், இன்றளவில் விமானப் போக்குவரத்து முன்னேற்றம் அடைந்துள்ளதனாலும் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களின் முன்னேற்றத்தினாலும் இந்த ரகத்திற்குட்பட்ட கப்பல்கள் குறைவாகவே உள்ளன. 'டைடானிக்' கப்பல் இதற்கு தகுந்த ஓர் உதாரணமாகும்.

## அதிசொகுசு கப்பல்கள் (Cruise Ships)


ஓஷன் லைனர் கப்பல்களுக்குப் பின் பயன்பாட்டிற்கு வந்த அதிசொகுசு ரக கப்பல்கள் இவை ஆகும். இவை மிகவும் வேகமாகப் பயணிக்கக்கூடியவை. பலவித அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய நாடக அரங்கு, சினிமா அரங்கு, நீச்சல் தடாகம், நடன அரங்கு, விளையாட்டரங்கு மற்றும் பல்வேறு பொழுதுபோக்கு அரங்குகளும் இங்குள்ளன.

இந்தக் கப்பல்கள் ஐரோப்பா, வட அமெரிக்கா,தென் அமெரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களுக்கு அட்லாண்டிக் கடற் பிராந்தியம் ஊடாகப் பயணிகள் போக்குவரத்துக்கு என வடிவமைக்கப்பட்டவை ஆகும். 1990 ஆம் ஆண்டு வரை இந்த ரக கப்பல் 'ஓஷன் லைனர்' கப்பலை விட அளவில் சிறியதாகவே வடிவமைக்கப்பட்டது. 90 களுக்குப் பின்னர் மிகப்பெரிய கப்பலாக இது வடிவமைக்கப்பட்டது.

## டைடானிக்

உலகப் புகழ்பெற்ற டைடானிக் கப்பல் 1912 இல் உருவாக்கப்பட்டதாகும். இந்த கப்பலின் நீளம் 900 அடிகளாகும். இது 50,000 குதிரை வலு சக்தி கொண்டது. மணித்தியாலத்திற்கு 23 மைல்களைக் கடக்கக்கூடியது. இதில் பல வசதிகள் இருந்தன. குளிரூட்டி வசதிகள், நவீன விஞ்ஞானப் பயிற்சி வசதிகொண்ட விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம், அதிநவீன சமையலறை என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இதனைத்தவிர, 18 தொன் பலம் கொண்ட நங்கூரங்களும் இதில் இருந்துள்ளன.

கப்பலின் ஊழியர்கள் உட்பட 2235 பயணிகள் இதில் பயணிக்க முடியும். இந்த கப்பல் குறித்து இதனை உருவாக்கிய பொறியியலாளர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். எனினும், 1912 ஏப்ரல் 10 ஆம் திகதி சவுத் என்டனி துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த டைடானிக், 4 நாட்கள் மட்டுமே கடல் பிரயாணத்தை மேற்கொண்டது. ஏப்ரல் 14 ஆம் திகதி பனிப்பாறை ஒன்றில் மோதி, சேதத்துக்குள்ளான இக்கப்பல் முற்றாக கடலில் மூழ்கியது. இது கடற் போக்குவரத்து வரலாற்றில் நிகழ்ந்த ஒரு மோசமான விபத்தாகவே இன்றும் கருதப்படுகின்றது.





## எமது நாட்டிற்கு வருகின்ற பயணிகள் கப்பல்கள்

2007 ஆம் ஆண்டானது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பயணிகள் கப்பல் வருகை குறித்த விசேட ஆண்டாக அமைந்தது. இதற்குக் காரணம், வெளிநாட்டுப் பயணிகளை ஏற்றிச்சென்ற ஆறு அதிசொகுசுக் கப்பல்கள் 48 மணித்தியாலங்களுக்குள் தொடர்ச்சியாக கொழும்பு துறைமுகத்திற்குள் பிரவேசித்திருந்தமையாகும். ஆறு கப்பல்கள் தொடர்ச்சியாக இலங்கைக்குள் பிரவேசித்தமை இதுவே முதல் தடவையாகும்.

பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவிலானோர் இந்த கப்பல்கள் ஊடாக கொழும்புக்கு வந்திருந்தனர். இது சுற்றுலாத்துறை முன்னேற்றத்திற்கு பேருதவியாக அமைந்தது.


✱ 'எக்வா மெரைன்' எனும் பயணிகள் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தது. 'லூயி க்ரூஸ் லைனர்' நிறுவனத்திற்குரிய இந்த பயணிகள் போக்குவரத்து கப்பல் 2009 டிசம்பர் 7 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தது. அனைத்து வசதிகளுடனான 40 அறைகளை உள்ளடக்கிய இந்தக் கப்பலில் 1200 பயணிகள் பயணிக்கமுடியும்.

✱ 'Voyager of Discovery' எனும் அதிசொகுசு ரக பயணிகள் கப்பல் 2009 டிசம்பர் 25 ஆம் திகதி கொழும்புக்கு வந்திருந்தது.

இவ்வாறான பயணிகள் கப்பல்களின் வருகையினால் எமது நாட்டிற்கு பெரும் வருமானம் கிடைக்கின்றது. சுற்றுலாத்துறைக்கும் உத்வேகம் கிடைக்கின்றது. இதனால், எதிர்வரும் காலங்களில் பயணிகள் கப்பல்களின் வருகைக்கு ஏற்ற விதத்தில் இலங்கைத் துறைமுகங்களின் வசதிகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. -(இ)

கடற் பயணத்தில் ஈடுபடும் அதிசொகுசு கப்பல் ஒன்றில் உள்ள சில வசதிகள்.

## கப்பலொன்று கடலில் மிதக்கும் விதம்



நீரினால் கப்பலுக்கு கிடைக்கும் மேல் அழுத்தம்

கப்பலின் நிறையினால் கப்பலுக்கு நீரிலிருந்து மேல்-கீழ் அழுத்தங்கள் கிடைக்கின்றன. இந்த சமநிலையினாலேயே கப்பல் நீரில் மிதக்கின்றது.

### உங்களுக்குத் தெரியுமா?

இன்று உள்ள அதிசொகுசு பயணிகள் கப்பல் ஒன்று 2 லட்சத்து 25 ஆயிரம் தொன்னிலும் அதிக நிறைகொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர் சொல்

ஒரு மரத்தில் ஒரு நாரையும் அதன் ஐந்து குஞ்சுகளும் ஒற்றுமையாக் வாழ்ந்து வந்தன. ஒருநாள் தாய் நாரை குஞ்சுகளுடன் இரை தேடிப்பறந்து செல்கையில் வழியில், "குஞ்சுகளே கீழே பாருங்கள், இத்தோப்பில் சாப்பிடவோ அல்லது களைப்பாறவோ வேண்டாம்" என்றது. இதைக் கேட்ட குஞ்சுகளில் ஒன்று தாயிடம், "ஏன் அம்மா அப்படி?" என்று கேட்டது. அதற்குத் தாய், "இங்கு ஆபத்துள்ளது. காலப்போக்கில் உங்களுக்கு அது விளங்கும்" என்றது. குஞ்சுகளுக்கு அங்கு என்ன ஆபத்துள்ளது என்று அறிய ஆவலாக இருந்தது.



ஒருநாள் ஐந்து குஞ்சுகளும் தாயின் சொல்லைப் பொருட்படுத்தாமல் அத்தோப்புக்குள் சென்றன. அங்குள்ள தானியங்களை கொத்திக்கொத்தித் தின்றன. பசியாறியதும் கூட்டுக்குச் செல்லப் பறந்தன.ஆனால்,அவற்றால் பறக்கமுடியவில்லை.காரணம்,அவை வலையில் சிக்கிக் கொண்டிருந்தன. நேரம் கடந்தது. குஞ்சுகளுக்குப் பயமும் தாயைப் பற்றிய நினைப்பும் ஏற்பட்டது. தாயின் சொல்லை அலட்சியம் செய்ததால் எவ்வளவு பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டோம் என்று வருந்தின. அப்பொழுது வேடன் ஒருவன் வலையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.



குஞ்சுகளோ பயத்தால் நடுங்கின. வேடனோ அதைப்பற்றிக் கவலைப் படாமல் குஞ்சுகளை பிடித்துச் சென்றான்.

குஞ்சுகளைக்கொண்டு போய் ஒரு கூட்டில் அடைத்துவிட்டு, தன் மனைவியை அழைத்து "நாரைக் குஞ்சுகள் கொண்டு வந்திருக்கேன். ஆக்கிப்போடு" என்றான். குஞ்சுகள் தாம் இறக்கப்போவதனை நினைத்து 'ஓ' என அழுதன. ஆனால் குஞ்சுகளின் அதிர்ஷ்டம் மனைவியின் பதில், "இல்லீங்க, நாளைக்கு மாமா வாறார். அப்ப ஆக்குவோம்" என்றாள். அவனும் சரி என்று சொல்லிவிட்டுப் போனான். பொழுது விடிந்தது. தாய் நாரை குஞ்சுகளை நினைத்து மிகவும் கவலை கொண்டது. இவை எங்கு சென்றிருக்கும் என யோசித்தது.இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தது. அதன்படி வேடனின் தோப்பை அடைந்தது. அங்குள்ள வேடனின் வீட்டில் உள்ள கூட்டில் குஞ்சுகளைக் கண்டது. குஞ்சுகளும் தாயைக் கண்டு மகிழ்ச்சியடைந்தன. பூரிப்படைந்தன. ஆனால், தாயோ எவ்வாறு குஞ்சுகளைக் காப்பாற்றலாம் என்று சிந்தித்தது. பின்னர் குஞ்சுகளின் அருகில் சென்று, "குஞ்சுகளே நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்." என்று கூறி ஒரு யோசனையைக் கூறியது. குஞ்சுகளும் அதற்கு இணங்கின.

சற்றுநேரம் கழித்து வேடன் வந்தான். குஞ்சுகள் இறந்து கிடப்பதைக் கண்டான். உடனே மனைவியை அழைத்து, "என்ன நடந்தது. இவை இறந்துவிட்டனவே" என்றான். மனைவியும், "அட ஆமாம். இனி இவற்றை ஒன்றுக்கும் பயன்படுத்த முடியாது" என்றாள். வேடன், "சரி இவற்றை எடுத்து வெளியே போடு நான் வேறு ஏதாவது கிடைக்குமா என்று பார்த்துவிட்டு வருகிறேன்". என்று கூறிவிட்டுச் சென்றான். மனைவி குஞ்சுகளை எடுத்து வெளியே வீசினாள். ஆனால், இறந்ததைப் போல் நடித்த குஞ்சுகள் திடீரென எழுந்து தாயுடன் சந்தோஷமாகப் பறந்து சென்றன. இது கண்ட வேடனின் மனைவி திகைத்து நின்றாள். இனி அவை தாய் சொல்லை மட்டுமல்ல.... மூத்தோர் சொல்லையும் கேட்டு வாழும்.

எம்.வை.எம்.ஷரப்,
சம்மாந்துறை.

# சுமை



சிந்திக்காத வரை மூளை
தலைக்குச் சுமை!
பயன்படாதவரை பணம்
பெட்டிக்குச் சுமை!
துணிவு இல்லாதவரை
பயம் வெற்றிக்குச் சுமை!
உழைக்காதவரை
மனிதா நீ உலகிற்கே சுமை!

எல்.மேர்சி அசங்கிகா சர்மிலி,
மாம்புரி.

# விடுகதைகள்

1. கொம்புகள் இரண்டு உண்டு மாடல்ல; வேகமாய் ஓடும் மானும் அல்ல. அது என்ன?
2. இனிப்பான், புளிப்பான், மணப்பான். அவன் யார்?
3. கூடு போலிருக்கும் கூடல்ல; இனிப்புக் கூடியிருக்கும் வெல்லம் அல்ல. அது என்ன?
4. பட்டை நீக்கி, பட்டை நீக்கி முன்னே வரும் சீமாட்டி. அவள் யார்?
5. வெள்ளைச் சீமாட்டிக்கு தலைக்கு மேலே விளக்கு எரியுது. அது என்ன?

## விடைகள்

*1. சைக்கிள்*
*2. பால், தயிர், நெய்*
*3. தேன்கூடு*
*4. சோளம்*
*5. மெழுகுவத்தி*

பி.குணாஞ்சலி,
ப/பிட்டரத்மலை இல 1
த.வித்.,
அப்புத்தளை.

# மிக நீளமான தங்க மீன்



உலகிலேயே மிகவும் நீளமான தங்க மீன் சீனாவின் 'ஷங்காய்' நீர்வாழ் காட்சியகத்தில் உள்ளது. உலகப் புகழ்பெற்ற குங்பூ வீரர் புரூஸ் லீயின் நினைவாக புரூஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மீன் 43.5cm நீளம் கொண்டது. இந்த மீனைப் பார்ப்பதற்காக உள்ளூர் மக்கள் மட்டுமன்றி, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வந்து குவிகின்றனர். இதன் பெயர் 'கின்னஸ்' புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது. இந்த மீனுடன் சராசரி நீளமுள்ள மற்றும் பல மீன்களையும் காண முடிகின்றது.இந்த மீனை விலை கொடுத்து வாங்க சீனாவில் பலரும் போட்டி போடுகின்றனர். அதனால், இதனது விலை மென்மேலும் உயர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எஃப்.ஹஜிஸ்தா பானு,
தரம்-10C,
கமு/அல்-மனார் ம.கல்.,

# மூங்கில்கள்

மூங்கில் ஒரு வகைப் புல்லினம்தான். எனினும், அதிவேகமாக வளரக்கூடிய தாவரமாகும். மூங்கில்கள் நேராக வளரும். ஆசியாவிலும் தென் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் இவை காணப்படுகின்றன.

மூங்கில்கள் 10-15cm உயரம் வரை வளரக்கூடியவை. உலகில் சுமார் 500 வகையான மூங்கில்கள் உள்ளன. எல்லா வகையான மூங்கில்களும் உள்ளீடு அற்றவையாகவும் வலிமையான இணைப்புக்களைக் கொண்டவையாகவும் உள்ளன.

அனேகமான மூங்கில்கள் வருடாந்தம் பூக்கும். சில வகை மூங்கில்கள் ஒரு நூற்றாண்டில் 3 அல்லது 4 முறைகள் மட்டுமே பூக்கக் கூடியவை.







வீடு கட்டவும் கூரை அமைக்கவும் அலங்காரப் பொருட்கள் செய்யவும் எனப் பல்வேறு தேவைகளுக்கு மூங்கில்கள் பயன்படுத்தப்படுகின்றன. புல்லாங்குழலும் மூங்கிலாலேயே செய்யப்படுகிறது. 'பென்டா' எனப்படும் விலங்கு விரும்பி உண்ணும் பிரதான உணவு மூங்கிலாகவே காணப்படுகின்றது. ஜப்பானில் நீர்க்குழாய்களாகவும் சீனாவில் காகித உற்பத்திக்கான மூலப்பொருளாகவும் மூங்கில்கள் பயன்படுத்தப்படுகின்றன.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.



# வானவில்

வானம் போட்ட கோலமாய்
வண்ணம் சிந்தும் வானவில்!

மேகக் கூந்தல் ரிப்பனாய்
மின்னும் அழகு வானவில்!

மழையை அழைக்கும்
பூங்கொத்தாய்
மலர்ந்து சிரிக்கும் வானவில்!

வான நாட்டுக்கொடியென
வளைந்து நிற்கும் வானவில்!

வண்ண வளையல் துண்டென
பாதி தெரியும் வானவில்!

ஏழு வண்ணத் தொகுப்பென
ஒற்றுமை உணர்த்தும் வானவில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழத்தின் மகிமை

உலகிலேயே மிகவும் வசதியான காலை உணவு வாழைப்பழம் என்று கூறுகிறார்கள். எப்படி அவ்வாறு உறுதியாகக் கூறமுடிகிறது? 'அது வயிற்றை நிரப்புகிறது, சமைக்கத் தேவையில்லை, சத்துகள் நிறைந்ததாக இருக்கிறது. அழகான, பிரகாசமான மஞ்சள் நிறத்தோலில் 'பேக்' செய்யப்பட்டு வருகிறது.' பென் சார்லஸ் ஹாரிஸ் என்பவர் தனது 'சமையலறை மருந்துகள்' என்ற தனது பிரபலமான நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'வாழைமரங்கள்' உண்மையில் மரங்கள் அல்ல. வாழைமரம் உண்மையில் ஒரு பெரிய செடியாகும். அதற்கு மரம் போன்ற தண்டுப் பகுதியோ, கிளைகளோ இருப்பதில்லை. இது பூத்துக் காய்த்தபின் வாடிவிடுகிறது.

வாழைமரத்தின் தண்டுப் பகுதி நெருக்கமாகச் சுற்றி அமைந்த இலைப் பரப்புகள் மற்றும் காம்புகள் ஆகும். வெப்பம் மிகுந்த, ஈரமான காலநிலைகளில் வாழைமரங்கள் நன்றாக வளர்கின்றன. இதற்கான நிலப்பகுதியில் நல்ல நீர்ப்பாசன வசதி இருக்கவேண்டும். வாழை ஆசியாவில் தோன்றியது என்றாலும் அது ஏனைய வெப்பமண்டலக் கண்டங்களான ஆபிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற வற்றுக்கும் பரவியது. ஆசிய நாடுகளான சீனா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகியன அதிகளவில் வாழைப்பழத்தை விளைவிக்கின்றன. ஆனால், வாழைப் பழம் விளைவிப்பதில் உலகிலேயே உச்சத்தில் நிற்பது இந்தியாதான். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 170 லட்சம் தொன் வாழைப்பழம் உற்பத்தி செய்யப் படுகின்றது.





## வாழை பற்றி சுவையான தகவல்கள்

✱ காலணிகளுக்கான 'பொலிஷ்' முடிந்துவிட்டால், அவற்றை புதிய வாழைப்பழத் தோலால் தேய்த்து அதன்பின், மென்மையான துணியால் வேகமாகத் தேய்தால் காலணி 'பளிச்'சென்று ஆகிவிடும்.

✱ வாழைப்பழம், கொட்டை இல்லாத சதைப் பற்றான பழம் ஆகும். உலகிலேயே பெரிய தாவரம் வாழைமரம்தான்.

✱ ஒரு தேன்கூடு தாக்கப்படும் அபாயம் ஏற்படும்போது காவலர் தேனீக்கள் தங்கள் கொடுக்குகளுக்கு அருகே உள்ள ஒரு சுரப்பியிலிருந்து வாழைப்பழ வாசனையை வெளிப்படுத்துகின்றன. அந்த வாசனை ஒட்டுமொத்த தேனீக்களையும் உஷார் படுத்திவிடுகிறது.

✱ வாழைமரத்துக்கு ஜப்பானிய மொழியில் 'பாஷோ' என்று பெயர். 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஜப்பானியக் கவிஞர் மாட்சுவோ. ஒரு வாழைமரத்துக்கு அருகே அமைந்த குடிசைக்கு இடம்பெயர்ந்தபோது, தனது பெயரை 'பாஷோ' என்று மாற்றிக் கொண்டார். 'பாஷோ' ஒரு ஜென் குரு ஆவார். புகழ்பெற்ற 'ஹைக்கூ' கவிதை வடிவத்திலும் மிகவும் திறமையானவர்.

✱ வாழைப்பழக் கழிவுகள் காகிதமாக மாற்றப்படுகின்றன. வாழை நார்களைக் கொண்டு பட்டுப் போன்ற மென்மையான துணிகள் நெய்யப்படுகின்றன. ஜப்பானில் தரமான பாரம்பரிய 'கிமோனோ' ஆடைகளை உருவாக்கவும், நேபாளத்தில் கம்பளம் தயாரிக்கவும் வாழை நார்கள் பயன்படுத்தப்படுகின்றன.



## வெப்பத்திலிருந்து பாதுகாப்பு

ஒரே அளவுள்ள இரண்டு துண்டு பனிக்கட்டிகளை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு துண்டு பனிக்கட்டியை வெள்ளை நிற துணியால் மூடுங்கள். இரண்டாவது துண்டை கறுப்பு நிற துணியால் மூடுங்கள். இரண்டையும் ஒரே நேரத்தில் வெயில்படும் இடத்தில் கொண்டு வையுங்கள். எந்தப் பனிக்கட்டி முதலில் உருகும். கண்டிப்பாக கறுப்பு துணியால் மூடிய பனிக்கட்டி தான். இதற்குக் காரணம்தான் என்ன? கறுப்பு நிறம் வெப்பத்தை அதிக அளவு உறிஞ்சும் தன்மை கொண்டது. வெள்ளை நிறம் வெப்பத்தை சிதறச் செய்யும். எனவே, கோடைக்காலத்தில் சூரிய ஒளியிலிருந்து, உங்களை பாதுகாத்துக்கொள்ள கறுப்பைவிட வெள்ளை நிறக் குடையைப் பயன்படுத்துவது நல்லது.




# தொழிலாளர்களை மகிழ்வித்த சேர்ச்சில்

வின்சன்ட் சேர்ச்சில் 2 ஆம் உலக மகா யுத்தத்தின்போது பிரித்தானிய நாட்டின் பிரதமராக இருந்தார். இவர் எழுதிய 'இரண்டாம் உலக யுத்தத்தின் நினைவுகள்' என்ற நூல் உலகப் பிரசித்தி பெற்றது. அதனால், 1953 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான 'நொபேல்' பரிசு இவருக்கு வழங்கப் பட்டது.



வின்சன்ட் சேர்ச்சில் அவர்கள் பிரித்தானிய ராணுவ வீரர்களைப் பற்றியே கூட்டங்களில் அதிகமாகப் புகழ்ந்து பேசி வந்தார். அதனால், பிரித்தானிய நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் இவர்மீது அதிருப்தி கொண்டிருந்தனர். சேர்ச்சிலின் நண்பரொருவர் இதுபற்றி அவரிடம் கூறியிருந்தார்.

ஒருநாள் சேர்ச்சில், சுரங்கத் தொழிலாளர்களை சந்திக்கச் சென்றிருந்தார். திடீரென பிரதமர் நிலக்கரி வெட்டும் சுரங்கத்திற்கு வந்ததும் அங்குள்ள தொழிலாளர்கள் அனைவரும் வியந்தனர்-மகிழ்ந்தனர். சேர்ச்சில் தொழிலாளர்களுடன் நெருங்கிப் பழகினார். தொழில் சம்பந்தமான விடயங்களை எல்லாம் கேட்டு அறிந்துகொண்டார். பின்னர் அங்கு ஒரு சிறிய கூட்டமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

அக்கூட்டத்தில் சேர்ச்சில் பேசும்போது எதிர்காலத்தில் ராணுவ வீரர்களின் பிள்ளைகளிடம் ''உங்கள் தந்தை இந்த நாட்டிற்காக என்ன செய்தார்'' எனக்கேட்டால், ''எனது தந்தை நாட்டைக் காப்பதற்காக எதிரிகளுடன் போராடி உடல் ஊனமுற்றார், எனது தந்தை நாட்டைக் காப்பதற்காக எதிரிகளுடன் போராடி வீர மரணமடைந்தார்'' எனப் பெருமையாக கூறுவார்கள்.

ஆனால், உங்கள் பிள்ளைகளிடம் எதிர்காலத்தில் இதே கேள்வியைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்கள்?'' என்ற கேள்வியைக் கேட்டதும் அங்குள்ள தொழிலாளர்களின் முகமெல்லாம் கறுத்துப்போயின....!

தொழிலாளர்களின் மனநிலையை அறிந்த சேர்ச்சில்,

''எங்கள் தந்தை எமது நாட்டைக் காப்பாற்றுவதற்காக எதிரிகளுடன் போராடச் சென்ற ராணுவ வீரர்களின் வாகனங்களாகிய புகைவண்டிகள், கப்பல்களுக்குத் தேவையான நிலக்கரியை இரவு பகலாக ஓய்வின்றி வெட்டி அனுப்பினார்கள் எனப் பெருமையாகச் சொல்வார்கள்'' என்றதும் அங்குள்ள தொழிலாளர்களின் முகமெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கின. கைதட்டல்கள் வானளவு உயர உயரச் சென்றன.

என்.மொஹமட் லாபீர்,
பதுளை.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3459
கிமோணிக்கா செலர்,
தரம்-9^,
ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்.,
சம்மாந்துறை.


அங்.இல: 3460
து.அனுசன்,
தரம்-6,
மடுக்கரை அ.த.க.பாட.,
மன்னார்.


அங்.இல: 3461
மா.துஜீபன்,
தரம்-10,
இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3462
க.சோபிகா,
தரம்-10,
சைவப் பிரகாச ம.வித்.,
வவுனியா.


அங்.இல: 3463
அ.கஜன்,
தரம்-11^,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.


அங்.இல: 3464
எம்.ஹாரிஸ், தரம்-9^,
மட்/வா.அன்-நூர்
தே.பாட.,
வாழைச்சேனை.


அங்.இல: 3465
நா.கிருதார்த்தன்,
தரம்-4,
வவுனியா த.ம.ம.வித்.,
வவுனியா.


அங்.இல: 3466
ப.கலைவேந்தன்,
தரம்-8,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.


அங்.இல: 3467
சி.சுகந்தன்,
தரம்-9,
விக்டோரியா கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3468
எம்.விஜித், தரம்-11,
யா/உடுப்பிட்டி
அ.மி.கல்.,
உடுப்பிட்டி.


அங்.இல: 3469
ர.ரஜீபன்,
தரம்-10,
யா/வீமன்காமம் ம.வித்.,
வீமன்காமம்.


அங்.இல: 3470
க.பாரதி,
உயர் தரம்,
யா/வேலணை ம.கல்.,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாய்ந்தமருது-09, கல்யாண வீதியைச் சேர்ந்த இம்தியாஸ்-தஹிமா தம்பதியரின் செல்வப் புதல்வி ஃபாத்திமா நூஹா, 28.02.2010 அன்று தனது இரண்டாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்-கே.எல்.ஹில்மி)*

குருநாகல்-ஹிரிபிடியைச் சேர்ந்த ஜுனைதீன்-ஜரீனா பேகம் தம்பதியரின் செல்வப் புதல்வி ஃபாத்திமா இர்ஷானா, 05.03.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்-அஸ்ரா)*








பாணந்துறை-எழுவிலையைச் சேர்ந்த முன்ஸிர்-சுமையா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.முஆத், 05.03.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.


கெகுணகொல்ல-நிதுல்லகஹப்பிட்டியைச் சேர்ந்த அப்துல் கலாம்-நுஸ்ரா தம்பதியரின் செல்வப் புதல்வி அப்ரா, 11.03.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்-றசானா)*




# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## அன்னாசி



எஸ்.எம்.ஸப்ராஸ்,
தரம்-2, மாறை/ஸாஹிரா கல்.,
வெலிபிடிய.



நிலாமியா மதீன்,
தரம்-3ᴬ, அல்-அமான் மு.ம.வித்.,
கல்லொளுவை.

## வாத்து



பு.பவதாரணி, தரம்-4,
யா/தொல்புரம் அ.மி.த.க.பாட.,
தொல்புரம்.




எம்.உஷா, தரம்-5,
க/டெம்பள்ஸ்டோவ் த.வித்.,
ரொசல்ல.

## கம்பளம் ஒன்றுக்கான அலங்காரம்




செ.அனாபவதாரணி,
தரம்-7ᴮ, யா/வேம்படி ம.கல்.,
யாழ்ப்பாணம்.


## கப்பல்



ஏ.எஃப்.ஸும்ரா,
தரம்-6ᴬ, மாறை/ஸாதாத் ம.வித்.,
கொடபிடிய.



பு.ஐங்கரன், தரம்-8ᴬ,
யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்.,
சுழிபுரம்.



எம்.நஸ்ஹான்,
தரம்-7ᴮ,
ப/அல்-முர்ஷித் ம.வித்.,
சில்மியாபுர.

## கடற்கரைக் காட்சி



வி.ரொமேனாஸ்டெப்னி,
தரம் - 11, இ/இந்துக் கல்.,
பலாங்கொடை.



எஃப்.ஹப்ஸா,
தரம்-9ᴰ, அல்-அஸ்ஹர் ம.கல்.,
திஹாரிய.



ஏ.ஜே.ஜமியா,
தரம்-10, அஸ் ஷபா மு.வித்.,
வரிப்பத்தான்சேனை-03.

## கோழியும் குஞ்சும்



க.லுஜீவன்,
தரம்-10ᴬ, இந்து தே.கல்.,
மாத்தளை.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



சி.அகல்யா,
தரம்-9,யா/இ.ம.கல்.,
யாழ்ப்பாணம்.



ஏ.எம்.அஹ்ஸன்,
ஒக்ஸ்ஃபோர்ட்
இன்டர்நெஷனல்
பா. பாட.,
கஹடோவிட.



எம்.முர்ஷாத், தரம்-7,
தி/அல்-பதாஹ்
மு.ம.வித்., நிலாவெளி.



எஃப்.இன்பா,
தரம்-4,
ஸாஹிரா மு.வித்.,
பஸ்யால.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**முடிவுத்திகதி 16.03.2010**

### மே மாதத்துக்கான தலைப்புகள்

- ★ தரம் 1-5 - மரம் அல்லது வானவில்
- ★ தரம் 6-8 - மாமரம் அல்லது பூக்கூடை
- ★ தரம் 9-11 - வெசக் அல்லது தபால்காரன்

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெருந்திரளான வீரர்கள் இறந்துபோன போர்க்களம்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் இவான் என்ற பெயருடைய இளவரசனும் அவனது மூன்று சகோதரிகளும் வாழ்ந்து வந்தனர். இளவரசி மாரியா, இளவரசி ஓல்கா, இளவரசி ஆன்னா என்பது முறையே அவர்களுடைய பெயர்கள்.

அவர்களுடைய பெற்றோர் மரணப்படுக்கையில் இருக்கும் போது தங்கள் மகனிடம், ''மணம் முடித்துக்கொடுக்காமல் உன் சகோதரிகளை நீண்டகாலம் வைத்திருக்காதே. அவர்களை மணக்கக்கோரி எவன் முதலில் வருகின்றானோ அவனுக்கு மணம் செய்து கொடு'' என்று கூறிவிட்டு மரணமடைந்து விட்டார்கள்.

இளவரசன் இவான் தன் பெற்றோர்களை அடக்கம் செய்தான். கவலையை மறக்க முயல, தனது சகோதரிகளுடன் பசுமையான தோட்டத்தில் உலாவச் சென்றான். திடீரென்று வானில் கருமேகம் ஒன்று தோன்றியது. பயங்கரமான புயற்காற்று வீசியது.

''வாருங்கள், சகோதரிகளே... நாம் வீட்டுக்குப் போகலாம்'' என்றான் இளவரசன் இவான்.

அவர்கள் மாளிகையை அடைந்த உடனேயே இடி முழங்கி மேற்தளம் இரண்டாகப் பிளக்க, ராஜாளி ஒன்று அப்பகுதிக்குள் இருந்து பறந்து வந்தது. அது தரை இறங்கியதும் உயரமான அழகிய இளைஞனாக மாறியது.

''வணக்கம் இளவரசன் இவான். உன் வீட்டுக்கு விருந்தாளியாகப் பலமுறை வந்தேன். ஆனால், இப்போது பெண் கேட்க வந்திருக்கிறேன். உன் சகோதரி இளவரசி மாரியாவை மணந்துகொள்ள விரும்புகிறேன்'' என்று கூறினான்.

''என் சகோதரி உன்னை விரும்பினால், நீ மணந்து கொள்ளமுடியும். ஆனால், அவளை என்னால் கட்டாயப்படுத்த முடியாது''

இளவரசி மாரியா தனது ஒப்புதலைத் தர, ராஜாளி அவளை மணந்து தனது நாட்டிற்குத் தூக்கிச் சென்றது.

நாட்களும் மாதங்களும் கடந்தன. ஓராண்டு சென்றுவிட்டது.

இளவரசன் இவானும் அவனது இரு சகோதரிகளும் பசுமையான தோட்டத்தில் உலாவச் சென்றனர். திரும்பவும் வானில் கருமேகம் ஒன்று சூழ்ந்தது, மின்னல் வெட்டியது, கடுமையான காற்று வீசத் தொடங்கியது.

''வாருங்கள் சகோதரிகளே, நாம் வீட்டுக்குப் போகலாம்'' என்றான் இளவரசன் இவான்.

அவர்கள் மாளிகையை அடைந்த உடனேயே இடிமுழங்கி மேற்தளம் இரண்டாகப் பிளக்க, கழுகு ஒன்று அப்பகுதிக்குள் இருந்து பறந்து வந்தது. அது தரை இறங்கியதும் உயரமான அழகிய இளைஞனாக மாறியது.

''வணக்கம் இளவரசன் இவான்! நான் விருந்தாளியாகப் பலமுறை இங்கே வந்தேன். ஆனால், இப்போது பெண்கேட்க வந்திருக்கிறேன். இளவரசி ஓல்காவை மணந்துகொள்ள விரும்புகிறேன்''

இளவரசன் இவான் கூறினான்: ''இளவரசி ஓல்கா உன்னை



விரும்பினால், நீ அவளை மணக்க முடியும். அவளை என்னால் கட்டாயப் படுத்த முடியாது''

அவர்கள் மாளிகையை அடைந்த உடனேயே இடி முழங்கி மேற்தளம் இரண்டாகப் பிளக்க, ராஜாளி ஒன்று அப்பகுதிக்குள் இருந்து பறந்து வந்தது. அது தரை இறங்கியதும் உயரமான அழகிய இளைஞனாக மாறியது

இளவரசி ஓல்கா தனது ஒப்புதலைக் கொடுத்து கழுகை மணந்து கொண்டாள். கழுகும் அவளைத் தூக்கிக்கொண்டு தனது நாட்டிற்குச் சென்றது.

மேலும் ஓராண்டு சென்றது. இளவரசன் இவான் தனது தங்கையிடம் கூறினான்:

''வா சகோதரி, நாம் பசுமையான தோட்டத்தில் உலாவி வரலாம்''

அவர்கள் சிறிது நேரம் நடக்க, திரும்பவும் கருமேகம் ஒன்று வானில் சூழ்ந்து, மின்னல் வெட்டி, கடுமையான காற்று வீசத் தொடங்கியது.

''நாம் வீட்டுக்குப் போகலாம் சகோதரி!'' என்றான் இளவரசன் இவான்.

அவர்கள் வீட்டை அடைந்து, இருப்பதற்கு முன்னரே இடி முழங்கி மேற்தளம் இரண்டாகப் பிளக்க, அண்டங்காக்கை ஒன்று அப்பகுதிக்குள் இருந்து பறந்து வந்தது. அது தரை இறங்கியதும் உயரமான அழகிய இளைஞனாக மாறியது. அவன் முன்னையவர்களைவிட மேலும் கவர்ச்சியோடு இருந்தான்.

''விருந்தாளியாகப் பலமுறை இங்கே வந்தேன். ஆனால், இப்போது பெண்கேட்க வந்திருக்கிறேன். இளவரசி ஆன்னாவை எனக்கு மணம் முடித்து வைக்கமுடியுமா?'' என்று கேட்டான்.

''தனது விருப்பம் போல நடக்க என் தங்கைக்குச் சுதந்திரம் உண்டு. அவள் உன்னை விரும்பினால், நீ அவளை மணக்கலாம்''

இளவரசி ஆன்னா சம்மதிக்கவே அவளை மணந்து கொண்ட அண்டங்காக்கை அவளைத் தன் நாட்டுக்குத் தூக்கிச் சென்றது.

இளவரசன் இவான் தனிமையில் விடப்பட்டான். ஓராண்டு முழுக்கத் தனிமையில் வாழ்ந்தான். தனது சகோதரிகளுக்காகப் பெரிதும் ஏங்கினான்.

''எனது சகோதரிகளைப் போய்ப் பார்த்து வரலாம்'' என நினைத்துக் கிளம்பினான். நீண்டதூரம் குதிரையில் சவாரி செய்தான். இறுதியில் பெருந்திரளான வீரர்கள் முறியடிக்கப்பட்டு இறந்துபோன போர்க்களத்தை வந்தடைந்தான்.

''உங்களில் யாரேனும் உயிரோடு இருந்தால், எனக்குப் பதில் சொல்லுங்கள். இந்தச் சக்திமிக்க படையை அழித்தது யார்?'' என்று இளவரசன் இவான் கத்தினான்.

உயிருடன் இருந்த ஒரே ஒரு மனிதன் பதிலளித்தான்; ''இந்தச் சக்திமிக்க படையை அழித்தது பேரழகி மாரியா மரெவ்னா'' என்றான் அந்த மனிதன். (தொடரும்)

# மேதாவித்தனம்

ஒருநாள், ஆசிரியர் ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டு மாணவர்களுக்குப் பாடத்தை விளக்கிக்கொண்டிருந்தார். ஆனால், ஒருமாணவனுக்கு ஆசிரியர் கூறியது புரியவேஇல்லை.

''எல்லாவற்றையும் புரியும்படி சொல்லமுடியுமா?'' என்று கேள்வி வேறு கேட்டுவிட்டான்.

''கேட்பவர்களுக்கு விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படி புரியும்படி சொன்னாலும் பயன்படாது. பார்வையற்ற ஒருவனுக்கு என்ன முயன்றாலும் பாலின் தன்மையை உணர்த்த முடியாது. இதை விளக்க ஒருகதை இருக்கிறது'' என்றார் ஆசிரியர்.

''என்ன கதை?'' என்று ஆர்வத்துடன் கேட்டான் மாணவன்.

''ஒரு வீட்டில் பார்வையற்ற ஒருவன் தங்கி இருந்தான். அங்கே பெண் ஒருத்தி தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்போது விக்கல் எடுத்த குழந்தை அழத் தொடங்கியது.

''குழந்தை ஏன் அழுகிறது?'' என்று கேட்டான் பார்வையற்றவன்.

''பால் குடித்த குழந்தை விக்கிக் கொண்டதால் அழுகிறது'' என்றாள் அவள்.

''பாலா? அது எப்படி இருக்கும்?'' என்று கேட்டான் பார்வையற்றவன்.

''பால் கொக்குப் போல வெண்மையாக இருக்கும்''

கொக்கைப் பாத்திராத அவன், ''கொக்கு எப்படி இருக்கும்?'' என்று கேட்டான்.

தன் கையை கோணலாக வளைத்துக்காட்டிய அவள், ''தொட்டுப்பார்-இதைப் போலக் கொக்கு இருக்கும்'' என்றாள்.

அதைத் தடவிப் பார்த்த அவன், ''இவ்வளவு பெரிய முரட்டுப்பொருள் குழந்தையின் தொண்டையில் சிக்கினால் ஏன் விக்கல் எடுக்காது என்று கேட்டான்'' பார்வையற்றவன்.



இக்கதையைக் கூறிய ஆசிரியர், கேள்வி கேட்ட அந்த மாணவனைப் பார்த்தார். பாடத்தை தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும் எதிர்க்கேள்வி கேட்டுத் தன்னை மேதாவியாகக் காட்டிக்கொள்ள நினைத்த அந்த மாணவன் வெட்கித் தலைகுனிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் கமல், நிமல் மற்றும் நிமலின் தங்கைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

නිමල්: කමල් තේ බොනවාද? කූල් ඩ්‍රින්ක් බොනවාද?
கமல் தே பொனவாத? கூல் ட்ரின்க் பொனவாத?
நிமல் கமல் தேநீர் குடிக்கின்றீர்களா? குளிர்பானம் குடிக்கின்றீர்களா?

කමල්: මට තේ හොඳයි.
மட தே ஹொந்தய்.
கமல்: எனக்கு தேநீர் நல்லது.

නිමල්: නංගි, මේ කමල් ඇවිත්. තේ එකක් ගේන්න.
நங்கி, மே கமல் எவித். தே எகக் கேன்ன.
நிமல்: தங்கை, கமல் வந்திருக்கிறார். தேநீர் ஒன்று கொண்டுவாருங்கள்.



නංගි: හොඳයි අයියේ.
ஹொந்தய் அய்யே.
தங்கை: நல்லது அண்ணா.

නංගි: ඉතින් කොහොමද අයියේ?
இதின் கொஹொமத அய்யே?
தங்கை: எப்படி அண்ணா?

කමල්: හොඳයි නංගි. සනීපෙන් ඉන්නවා.
ஹொந்தய் நங்கி. சனீபென் இன்னவா.
கமல்: நல்லது தங்கை. நலமாக இருக்கின்றேன்.

නිමල්: නංගි, කමල්ට රැකියාවක් ලැබිලනේ.
நங்கி, கமல்ட ரெகியாவக் லெபிலனே.
நிமல்: தங்கை, கமலுக்கு வேலையொன்று கிடைத்துள்ளதுதானே.

නංගි: ආ.... ඇත්තද අයියේ? කොහේද?
ஆ.... எத்தத அய்யே? கொஹேத?
தங்கை: ஆ.... உண்மையா அண்ணா? எங்கே?

කමල්: ලංකා බැංකුවේ නංගි.
லங்கா பெங்குவே நங்கி.
கமல்: இலங்கை வங்கியில் தங்கை.

නංගි: ලංකා බැංකුවනම් හරි හොඳයිනේ. මගේ සුභ පැතුම්.
லங்கா பெங்குவநம் ஹரி ஹொந்தய்னே. மகே சுப பெதும் அய்யே.
தங்கை: இலங்கை வங்கி என்றால் நல்லதுதானே. என்னுடைய வாழ்த்துக்கள்.

කමල්: බොහොම ස්තූතියි නංගි.
பொஹொம ஸ்தூதிய் நங்கி.
மிக்க நன்றி தங்கை.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: எனக்கு தேநீர் நல்லது.
මට තේ හොඳයි.

i. கமலுக்கு வேலை கிடைத்துள்ளது.
..........................................................
ii. இலங்கை வங்கியில் தங்கை.
..........................................................
iii. என்னுடைய வாழ்த்துக்கள்.
..........................................................






இறந்தகால தனி வாக்கியம் (**Past Simple Tense**) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (**Present Simple Tense**) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும் மேலும் ஒப்பிட்டுப் பயில்வோம்.

| Past Simple Tense<br>இறந்தகால தனி வாக்கியம் | Present Simple Tense<br>நிகழ்கால தனி வாக்கியம் |
|---|---|
| (அ) I met.<br>நான் சந்தித்தேன். | (ஆ) I meet.<br>நான் சந்திக்கின்றேன். |
| (இ) You met.<br>நீ சந்தித்தாய். | (ஈ) You meet.<br>நீ சந்திக்கின்றாய். |
| (உ) We met.<br>நாங்கள் சந்தித்தோம். | (ஊ) We meet.<br>நாங்கள் சந்திக்கின்றோம். |
| (எ) They met.<br>அவர்கள் சந்தித்தனர். | (ஏ) They meet.<br>அவர்கள் சந்திக்கின்றனர். |

---

(அ) I met him yesterday.
நான் அவனை நேற்றுச் சந்தித்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) I meet him everyday.
நான் அவனை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றேன்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(இ) You met him yesterday.
நீ அவனை நேற்றுச் சந்தித்தாய்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) You meet him everyday.
நீ அவனை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றாய்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(உ) We met the manager yesterday.
நாங்கள் முகாமையாளரை நேற்றுச் சந்தித்தோம்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) We meet the manager daily.
நாங்கள் முகாமையாளரைத் தினமும் சந்திக்கின்றோம்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(எ) They met the principal yesterday.
அவர்கள் அதிபரை நேற்றுச் சந்தித்தனர்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஏ) They meet the principal daily.
அவர்கள் அதிபரைத் தினமும் சந்திக்கின்றனர்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(ஐ) The children met the principal yesterday.
அந்தச் சிறுவர்கள் நேற்று அதிபரைச் சந்தித்தனர்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஒ) The children meet the principal daily.
அந்தச் சிறுவர்கள் தினமும் அதிபரைச் சந்திக்கின்றனர்.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# 'சிலி' பூகம்பத்தினால் பாரிய அழிவுகள்

'சிலி' நாட்டில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தில் மரணமடைந்தோரின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்திருப்பதனால் அந்நாட்டின் பொருளாதாரமும் பாரிய சரிவு நிலையை அடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பூகம்பம் ஏற்பட்டு சில தினங்கள் கடந்துவிட்ட போதிலும் இடிபாடுகளை அகற்றும் பணிகள் இன்னும் பூர்த்தியாகவில்லை.

இப்பூகம்பத்தின் காரணமாக 20 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 8.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் சில பகுதிகளில் 'சுனாமி' தாக்கங்களும் நிகழ்ந்துள்ளன. 50வருடங்களின் பின்னர் சிலி நாட்டில் ஏற்பட்ட பாரிய பூகம்பமாக இது கருதப்படுகின்றது.

மின்சாரம், தொலைபேசி தொடர்புகள் முழுமையாக இழக்கப்பட்டுள்ளதுடன், சில ரசாயன தொழிற்கூடங்களும் தீப்பிடித்துள்ளன.

மேற்படி பூகம்பத்தின் அதிர்வுகள் அர்ஜன்ரனாவிலும் 6.0 அளவில் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# சீனா மீது தொடர்ந்தும் நேசம் கொண்டுள்ளேன்

## -தலாய் லாமா


சீனா மீதான தனது நேசம் இன்னமும் குறைந்துவிடவில்லை என்று திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா அறிவித்துள்ளார்.

அதேவேளை, திபெத்திற்கான சுயாட்சி கொள்கையினை தான் இன்னமும் கைவிடவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்தித்த பின்னர் சீ.என்.என் செய்திச்சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே தலாய் லாமா அவர்கள் மேற்படி கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

சீனாவினால் மேற்கொள்ளப்படுகின்ற பல வகையிலான கொடூரமான கொள்கைகளினால் பல சந்தர்ப்பங்களில் பெரிதும் அசௌகரியங்களுக்கு தாம் ஆளாகியதாகவும் ஆனால், தான் தொடர்ந்தும் சீனா மீது கொண்டுள்ள நேசம் குறைந்து விடாதவாறு தன்னைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டிருப்பதாகவும் தலாய் லாமா மேலும் தெரிவித்துள்ளார்.



## அற்லஸ் கேள்வி - 246

**கேள்வி:** வியட்நாமில் கரையொதுங்கிய திமிங்கிலத்தின் எடை எவ்வளவு?

சரியான விடை.......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 246,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 244 இன் சரியான விடை: ஸிம்பாப்வே**

**பரிசு பெறுவோர்**

எம்.என்.முஹம்மத்,
151, மீரிப்பன்னை வீதி, தர்கா நகர்.

வி.யூலிஸ்ரா,
மே/பா விநாயகமூர்த்தி,
14/1 குணானந்த மாவத்தை, கொழும்பு-13.

எஃப்.ஹஃப்ஸா,
717, காந்தி மாவத்தை, ஹுனுப்பிட்டி, வத்தளை.

# திமிங்கிலத்திற்கு மரணச் சடங்கு

வியட்நாமில் கரையொதுங்கிய 15 தொன் எடையுடைய பாரிய திமிங்கிலமொன்றின் சடலத்தை 12,000 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் ஒன்று சேர்ந்து அடக்கம் செய்தனர்.

மேலும், இந்த திமிங்கிலத்திற்காக விசேட மரணச் சடங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீனவ சமூகத்தினருக்கு அதிர்ஷ்டம் கிட்டவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு மரணச்சடங்குகள் நிகழ்த்தப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பேனா அளவிலான சிறிய 'ஸ்கேன்' மெஷின்




முழுமையான A4 பக்கமொன்றை ஒருசில செக்கன்களுக்குள் பிரதியெடுக்கும் வகையில், 'ஸ்கேன்'(Scan) செய்யக்கூடியதும் கையில் கொண்டு செல்லத்தக்கதுமான சின்னஞ்சிறிய கையடக்க 'ஸ்கேன்' மெஷின் ஒன்று அறிமுகமாகியுள்ளது. கிட்டத்தட்ட ஒரு பேனாவின் வடிவில் இது காணப்படுகின்றது. Vupoint PDSST410-vp magic wand என்று இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. சுருக்கமாக இதனை 'மெஜிக் தடி' என்றும் அழைக்கலாம்.

இந்த சின்னஞ்சிறிய 'ஸ்கேனரை' லெப்டொப்பில் பொருத்திக் கொள்ளவும் முடியும். இந்த 'ஸ்கெனரில் A4 தாள் அளவில் 600x600 ரெஸலூஷன் படத்தெளிவில் 'ஸ்கேன்' செய்யலாம். இந்த கையடக்க 'ஸ்கேனரில்' ஸ்கேன் செய்யப்படுபவை Micro என்ற பதிவு அட்டையில் (Card) பதியப்படுவதுடன் பின்னர் USB தொடர்பின்மூலம் அந்தப் பதிவினை கணினித் திரைக்குக் கொண்டு வரமுடியும். இதில் முழுவர்ணப் பிரதியொன்றை 'ஸ்கேன்' செய்வதற்கு 28 செக்கன்களும் கறுப்பு வெள்ளைப் படத்தை 'ஸ்கேன்' செய்ய 4 செக்கன்களுமே தேவைப்படுகின்றன. இதனை இயக்குவதற்கு AA ரக பெற்றரி இரண்டு போதுமானது. இதன் விலை 100 அ.டொலர்களாகும்.




# உலகின் புதிய ரக மோட்டார் வாகனம்



இது மோட்டார் வாகனத்துறையின் நவீன வளர்ச்சிக் காலகட்டமாகும். இங்கு காணப்படுகின்ற வாகனமானது பார்வைக்கு திரைப்படங்களில் கற்பனையாகக் காட்டப்படும் வேற்றுக்கிரகத்தைச் சேர்ந்த ஒரு வாகனம் போன்று தோற்றமளிக்கின்றபோதிலும் இது நிஜமாகவே அமெரிக்காவின் கொலிஃபோர்னியா மாநிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு நவீன ரக கார் ஆகும்.

'எப்டெரா 2 எச்' (Eptara 2H) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த வாகனமானது, 'எப்டெரா' என்ற நிறுவனத்தினாலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தின் தயாரிப்பாளர்களின் கருத்தின்படி, உலகிலேயே இதுவரை தயாரிக்கப்பட்ட வாகனங்களில் மிகவும் குறைந்த எரிபொருள் செலவில் செலுத்தக்கூடிய வாகனமாக இது அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பத்து செக்கன்களில் 97 கி.மீற்றர் தூரம் செல்லக்கூடிய வகையில் இந்த வாகனம் தயாரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதில் 'கெஸொலின்' என்றவோர் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. வாகனமானது மின்சாரத்தினால் இயக்கப்படாத பொழுது பயன்படுத்துவதற்காகவே 'கெஸொலின்' இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. மின்சாரத்தில் வாகனத்தை இயங்கச் செய்வதற்கு விசேட இயந்திரமொன்றும் உள்ளது. அதிலுள்ள பெற்றரியை ஒரு தடவை 'சார்ஜ்' செய்தால் அந்த வலுவைக் கொண்டு 130 கி.மீற்றர் தூரம் வரை செல்லக்கூடியதாக இருக்கும். முழுமையாக மின்சாரத்திலேயே செலுத்தக்கூடிய இந்த வாகனத்தில் மின்சார சேமிப்புத் தீர்ந்துவிடும் சந்தர்ப்பங்களில் 'கெஸொலின்' இயந்திரத்தை இயங்கச் செய்வதன்மூலம் தொடர்ந்து வாகனத்தைச் செலுத்தமுடியும். இதன்படி, நாளொன்றிற்கு 120 கி.மீற்றர் தூரத்திற்குக் குறைவாக வாகனத்தை செலுத்தியிருந்தால் 'கெஸொலினை' இயக்கவேண்டிய தேவையே ஏற்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜன்டீனா அணி திருப்பத்தை ஏற்படுத்துமா?








இந்த வருடம் தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள 'ஃபிஃபா' உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் பலரினதும் கவனத்திற்குரிய அணியாக இருப்பது ஆர்ஜன்டீனா அணியாகும்.

பல தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்றுள்ள ஆர்ஜன்டீனா அணியின் பயிற்றுனராக இருப்பவர் அந்த அணியின் முன்னாள் வீரரான மெரடோனா ஆவார்.

எனவே, இந்த முறை உலகக் கிண்ணப்போட்டிகளில் அவர் தனது அணியை வெற்றிகரமான ஒரு பாதைக்கு கொண்டு செல்வார் என்று விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவிற்கு சென்றிருந்த மெரடோனா அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் உட்பட அரங்கங்களின் தகுதித்தன்மை ஆகியன குறித்து ஆராய்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கார்ட்டுன் பிரியரா...?



நீங்கள் கார்ட்டுன் பிரியரா...? கார்ட்டுன் பார்ப்பதில் தப்பில்லை. ஆனால், அதற்கென சிறிதளவு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். எந்த வகையிலான கார்ட்டுன் பார்ப்பதென தேர்வு செய்யுங்கள். வீர, தீரம் எனும் பெயரில் தவறான சிந்தனைகளை ஏற்படுத்தும் கார்ட்டுன்களும் உள்ளன. அவற்றைப் புறக்கணியுங்கள். மென்மையான மன உணர்வுகளை சித்தரிக்கும் நல்ல தகவல்களைக் கூறும் கார்ட்டுன்களையே ரசியுங்கள்.



# அரங்கிற்கு சச்சினின் பெயர்



தென் ஆபிரிக்காவுடனான ஒருநாள் போட்டியில் 200 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்துள்ள டெண்டுல்கரை கௌரவிக்குமுகமாக அவர் இந்த சாதனை ஓட்டங்களைப் பெற்ற 'குவாலியூர்' மைதான பார்வையாளர் அரங்கிற்கு சச்சினின் பெயரை சூட்டுவதற்கு இந்திய கிரிக்கெட் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, இந்திய கிரிக்கெட் சபை சார்பில் தெரிவித்துள்ள கருத்தின்படி, இத்தனை அற்புதமான சாதனையை நிகழ்த்திய சச்சினின் சாதனையை கௌரவிக்க வேண்டியது நமது கடமையாகும். எனவே, அதற்காக 'குவாலியூர்' மைதானத்தின் பார்வையாளர் அரங்கிற்கு சச்சினின் பெயரை வைப்பது அவரை நாம் கௌரவிப்பதாக அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தரப்படுத்தலில் சச்சின் மூன்றாம் இடத்தில்

தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டித் தொடரில் 200 ஓட்டங்களைப் பெற்றமையால் ஐ.சி.சியின் ஒருநாள் போட்டித் தரப்படுத்தல் பட்டியலில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மூன்றாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்த பட்டியலின்படி டோனி முதலாவது இடத்திலும் அவுஸ்திரேலிய அணியின் மைக் அஸி இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.



தற்போது, ஒருநாள் அணிகளுக்கான தரப்படுத்தலில் அவுஸ்திரேலியா அணி முதலாவது இடத்திலும் இந்தியா இரண்டாவது இடத்திலும் தெ.ஆபிரிக்கா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

# உலகக் கிண்ண 'ஹொக்கி' போட்டிகள்



2010 ஆம் ஆண்டு, உலகக் கிண்ண 'ஹொக்கி' போட்டிகள் இந்தியாவின் புதுடில்லி நகரில் நடைபெற்று வருகின்றன. பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகிய இப்போட்டிகள் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறும். பத்து நாடுகள் கலந்து கொள்கின்ற மேற்படி போட்டிகள் இரண்டு பிரிவுகளில் நடத்தப்படுகின்றது. அதன்படி, 'ஏ' பிரிவில் ஜேர்மனி, நெதர்லாந்து, தென் கொரியா, நியூஸிலாந்து, கெனடா, அயர்லாந்து ஆகிய அணிகளும் 'பீ' பிரிவில் அவுஸ்திரேலியா, ஸ்பெயின், பாகிஸ்தான், இந்தியா, தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய அணிகளும் போட்டியிடுகின்றன.

கடந்த வருடம் இப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் அவுஸ்திரேலியாவும் மகளிர் பிரிவில் ஆர்ஜன்டீனாவும் செம்பியன் ஆகியமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்திலிருந்து 700 கி.மீ தூர சமாதான சைக்கிளோட்டப் போட்டி



700 கி.மீற்றர் தூரத்திற்கான சமாதான சைக்கிளோட்டப் போட்டிகள் இந்த மாதம் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிகளில் வெற்றியாளர்களுக்காக ஒரு மில்லியன் ரூபா பணப்பரிசு வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து திஸ்ஸமஹாராம வரையில் ஐந்து நாட்களுக்கு இப்போட்டிகள் நடைபெறும்.

போட்டி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமானாலும் உத்தியோகபூர்வமான ஆரம்பம் வவுனியாவிலிருந்தே ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்கு சமாந்தரமாக 'மவுன்டன்' சைக்கிளோட்டப் போட்டியொன்றும் நடைபெறும். இதில் இந்தியா, மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களும் கலந்து கொள்வர்.

மவுன்டன் சைக்கிளோட்டப் போட்டிகள் 10 வயதிற்குக் கீழ், 13 வயதிற்குக் கீழ், 16 வயதிற்குக் கீழ், 19 வயதிற்குக் கீழ் எனும் பிரிவுகளாக நடைபெறும்.

மக்களிடையே சமாதானத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்களான மவுன்டன் சைக்கிளோட்டச் சங்கத்தினர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுளம்புகளைக் கொல்லும் வண்ண மலர்

ஜோர்ஜியா தெற்கு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சிலர் நுளம்புகளை தம்வசம் கவர்ந்து-கொல்லும் செயற்கை மலர் ஒன்றைத் தயாரித்துள்ளனர். இதற்கு 'ProVector Flower Bt' என பெயரிடப் பட்டுள்ளது. இது குறித்த கள ஆய்வு நடவடிக்கைகளை போர்டோ ரிகோ காட்டுப் பகுதியில் எதிர்வரும் மே மாதமளவில் ஆரம்பிப்பதற்கு அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

விஞ்ஞானவியல் சஞ்சிகை ஒன்றில் குறிப் பிடப்பட்டிருந்தமைக்கு அமைய, ஜோர்ஜியா தெற்கு பல்கலைக்கழக மருத்துவரான தோமஸ் கொல்லர்ஸ் என்பவரே இந்த மலரை வடிவமைத் துள்ளார். நுளம்புகளைக் கவரும் நீலம், பச்சை, சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்களிலான இதழ்களுடன் ஒரு செயற்கை மலர் வடிவிலேயே இந்த ப்ளாஸ்டிக் பொறி தயாரிக்கப்பட் டுள்ளது. இந்த செயற்றிட் டத்துக்காக சுமார் 8 மில் லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ள தாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த செயற்கைப் பூவின் நடுப்பகுதியில் நுளம்புகளைக் கொல்லும் தன்மையுடைய தேன்சுவை கலந்த ஒரு வகை பக்றீரியாத் திரவம் தடவப்பட்டுள் ளது. இப்பகுதியில் வந்தமரக்கூடிய 50-100 சதவீதம் வரையிலான நுளம்புகள் இறந்து விடுகின்றன. இந்த மலர்ப் பொறியானது, நுளம்புகளில் இருக்கும் டெங்கு, மலேரியா நோய்க்காவிகளை அழித்து விடக்கூடியது என்பதோடு, சூழலுக்கு எந்தவித பாதகங் களையும் ஏற்படுத்தாத வகையில் தயாரிக் கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# இடி தாங்கும் தாங்கி

இடி-மின்னலின்போது உயர மான மரங்கள், கட்டடங்கள், வெட்டவெளி போன்ற இடங்க ளில் நிற்பதைத் தவிருங்கள் என வலியுறுத்தப்படுகின்றது. காரணம், இவ்வாறான இடங்களில் இடி-மின்னல் தாக்கம் அதிகமாக இடம்பெறுவதற்கான வாய்ப் புகள் அதிகம் என்பதனாலாகும்.

உயரமான கட்டடங்களில் பெரும்பாலும் இடிதாங்கி பொருத்தப்பட்டிருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இது ஏன் பொருத்தப்படுகின்றது?, எவ்வாறு இது இடியைத் தாங்குகின்றது? என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா?

இந்த சாதனத்தை உருவாக்கிய பெருமை பெஞ்சமின் ஃபிராங்க் ளின் அவர்களையே சாரும். பொதுவாக, இச்சாதனம் இடி தாங்கி அல்லது மின்னல் கடத்தி (Lightning conductor) என்று அழைக்கப்படுகின்றது.

மின்சாரத்தைக் கடத்தக்கூடிய மேல்பக்கம் கூர்மையான வடிவில் அமைந்த ஓர் உலோகத்தண்டு (Metal rod) வடிவிலேயே இது காணப்படுகின்றது. இதன் அடிப்பாகம் தரையில் புதைக்கப்பட்டு, மேல் பகுதி விண்ணை நோக்கி அமையுமாறு, கட்டடத்தின் கூரைப்பகுதியில் பொருத்தப்படுகின்றது.

மின்னல் உண்டாகும் போது, மின்னூட்டம் பெற்ற மேகக்கூட்டம் உயர்ந்த கட்டடங்கள் மேல் செல்லும். அப்போது மேகங்களி லிருந்து வெளிப்படும் மின்சாரம், கட்டடத்தின் மேலுள்ள மின்னல் கடத்தி அதாவது இடிதாங்கி வழியே புவிக்குச் சென்று விடும். இதன் காரணமாக மின்னல் தாக்குதலில் இருந்து கட்டடங்கள் பாதுகாக்கப்படுகின்றன.



> அரிய சாதனைகள் செய்யப்படுவது வலிமையினால் அல்ல; விடாமுயற்சியினால்தான்.
> – ஓவிட்



# கடற்கரைக் காட்சி - அகில இலங்கை சித்திரப் போட்டி - 2010

அன்பு பிள்ளைகளே,

கடந்த வருடங்களைப் போலவே இம்முறையும் 'கடற்கரைக் காட்சி' எனும் தலைப்பி லான சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் இப்போட்டியை நடத்துகின்றது.

கடற்கரையோரக் காட்சியொன்றை நீங்கள் நேரில் தரிசித்து கண்ட காட்சியாக சித்திர மொன்றை வரைந்து அனுப்பவேண்டும். முட்டையிடுவதற்காக கடற்கரைக்கு வருகின்ற கடல் ஆமைகள், ஆழமற்ற கடற் பகுதிகளில் முருகைக்கற்கள் காணப்படுதல் ஆகியன உள்ளடங்கிய கடற்கரையோர சுவாத்தியத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு காட்சியையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம்.

## போட்டி விதிமுறைகள்

- ★ ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
- ★ சித்திரத்தின் அளவு 35 செ.மீற்றர்X45 செ.மீற்றர் அளவில் இருத்தல் வேண்டும்.
- ★ எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
- ★ ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுவர் குழுவொன்றினால் பரிசுக்குரிய சித்திரங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகவும் அமையும்.
- ★ சித்திரம் வரையப்படும் தாளின் பின்புறத்தில் போட்டியாள ரின் பெயர், வீட்டு முகவரி, பிறந்த தினம், பாடசாலை, பாடசாலை முகவரி, போட்டிப் பிரிவு ஆகியனவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ★ போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.
- ★ போட்டி முடிவுகள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## சித்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'கடற்கரைக் காட்சி' அகில இலங்கை சித்திரப் போட்டி - 2010
கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம்,
இல-11, பெரேரா மாவத்தை,
மடதும்புர, பாணந்துறை.

## போட்டி முடிவு: 2010 மார்ச் 15 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு 077-9317619 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். வெற்றியீட்டப்படும் சித்திரங்களின் உரிமை கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரித்துடையதே.

## பரிசளிப்பு விழா

பரிசளிப்பு விழா மார்ச் மாதத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் கொழும்பில் நடைபெறும்.

## பங்குபற்றக்கூடியோர்

பாலர் வகுப்பு மாணவர்கள்.
ஆரம்பப் பிரிவு 6 ஆம் ஆண்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.
கனிஷ்ட பிரிவு - 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்கள்.
சிரேஷ்ட பிரிவு - 11, 12, 13 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள்.

## பரிசு விபரம்

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

| பாலர் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 2,500.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| ஆரம்பப் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| கனிஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 3,000.00 |

| சிரேஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 5,000.00 |

சான்றிதழ்: ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களை வரைந்த நூறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவெளிகளை நிரப்புங்கள் 3

| | |
|---|---|
|  l_on |  _ebr_ |
|  c_eet_h |  os_rich |
|  elep_ant |  gir_ff_ |
|  m_nke_ |  b_ffalo |

## சரியான விடையில் கோடிடுக 4

1.  மாலைதீவு/பூட்டான்
2.  இஸ்ரேல்/பலஸ்தீன்
3.  லெபனான்/ஆப்கானிஸ்தான்
4.  சீனா/துருக்கி





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.03.17 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 251**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக 2









மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக்கூடாதென்று நினைக்கிறாயோ, அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே. குற்றங்களில் பெரிய குற்றம், தன் குற்றங்களைத் திருத்த முயலாததுதான். -கொன்ஃபியூஸியஸ்

## ஏறு வரிசையில் எழுதுக 5

(1) 342, 118, 786, 97
..............................

(2) 3/4, 1/2, 1, 1/4
..............................

(3) XXXIII, XXIX, L, MM
..............................

## அறிவுக்கு விருந்து 248 விடைகள்

**போட்டி: 02**
(A) 60 மைல் (B) 17

**போட்டி: 03**
1. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
2. அறிவீன இடத்தில் புத்தி கேளாதே.
3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப்போகும்.
4. குணம் பெரியதேயன்றிக் குலம் பெரியதன்று.
5. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் குழியாக்கும்.

**போட்டி: 04**



**போட்டி: 05**
1. shovel
2. scarf
3. snowman
4. skates
5. coat
6. mittens

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 248 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.றீஸ்மா, தரம்-7,
தில்லையடி மு.ம.வித்., புத்தளம்.

**போட்டி: 02**
ஏ.எம்.உபாதா, தரம்-3,
ஸாஹிரா கல்., திருகோணமலை.

**போட்டி: 03**
ய.கீரன், தரம்-10,
மட்/சிவாநந்த தே.பாட., கல்லடி.

**போட்டி: 04**
ஸ்டெஃபாணி பிரியதர்ஷினி, தரம்-11,
மோபிறே கல்., கண்டி.


**போட்டி: 05**
ப.அனுஷா, தரம்-9C,
மீசாலை வீரசிங்கம் ம.வித்., மீசாலை.

### பாராட்டுப் பெறுவோர்

* ராசிக் எம்.றிஸாட், தரம்-8, க/உடுதெனிய மு.ம.வித்., உடுதெனிய.
* ஆர்.எஃப்.றிஸ்பா, தரம்-8B, குளி/எதுன்கஹகொட்டுவ மு.ம.கல்., எதுன்கஹகொட்டுவ.
* பி.மகேந்திரன், எதுன்கஹகொட்டுவ.
* பஜீலா இக்தார், குளி/எதுன்கஹகொட்டுவ ம.கல்.,
* எஃப்.என்.நஸ்ஹா நியாஸ், தரம்-9C, மின்ஹாத் தே.பாட., திக்வெல்ல.
* என்.செல்வப்பிரியா, மாளிகாவத்தை.
* இ.கோகிலவதனா, பருத்தித்துறை.
* ஏ.எம்.சுபைர், தரம்-6, மொ.பி.கனுல்வெல மு.வித்., பிபிலை.
* கே.விமலகிசாந்த, தரம்-7B, ஸ்ரீ கதிரேசன் த.ம.வித்., தெரணியகலை.
* ம.ஆபிர், சாய்ந்தமருது-16.


## இலக்கம் 1 ஐ எழுதுவதோடு, அருகிலுள்ள அறிவுறுத்தல்களின்படி நிறந்தீட்டுக






1

Color the boy.



Color 1 snowflake.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதக்கும் சுதந்திர நகரம்

உலகின் பெரும் கப்பல்கள் பற்றி அறிந்துள்ளோம். ஆனால், அவற்றையெல்லாம் விடப் பெரிதாக 'மிதக்கும் நகரம் போன்ற ஒரு கப்பல் உருவாகப் போகின்றது. அதில் என்ன புதுமையெனில் ஒரு மைல் தூரத்துக்கு 25 மாடிக் கட்டடங்கள் அமைந்திருந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்! அதுதான் 'பிரீடம் ஷிப்' என்னும் இந்த மிதக்கும் கப்பல் நகரம்.

இதன் நீளம் ஆயிரத்து 317 மீற்றர்கள். அகலம் 221 மீற்றர்கள். உயரம் 103 மீற்றர்கள். இந்தக் கப்பல் ஒரு கால்பந்து மைதானத்தின் நீளத்தைவிட உயரமானது. இரண்டு கால்பந்து மைதானங்கள் சேர்ந்த அகலம் கொண்டது. இவ்வளவு பெரிய 'மெகா' கப்பல் கடலில் மிதப்பது மட்டுமல்ல, உலகைச் சுற்றிலும் வலம் வரவும் போகிறது.

'பிரீடம் ஷிப்' பற்றிய எல்லாத் தகவல்களுமே பிரமிக்க வைக்கின்றன. இதில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் மொத்தம் 17 ஆயிரம் குடியிருப்புப் பிரிவுகள் அமையும். இக்கப்பல் தொடர்ந்து உலகம் முழுவதும் பயணம் மேற்கொண்டபடி இருக்கும். இங்கு நிரந்தரமாகத் தங்கியிருந்தபடி உலகைச் சுற்றிப் பார்க்கலாம்.

இந்தக் கப்பல் தளங்களின் உச்சியில் சிறு விமானங்கள் இறங்கி ஏறும் வகையில், ஆயிரத்து 158 மீற்றர் நீளமுள்ள




ஓர் ஓடுபாதையும் விமானங்களை நிறுத்துவதற்கான இடங்களும் அமைக்கப்படும். உல்லாசப் படகுகளை நிறுத்தும் பகுதி, ஒரு மிகப் பெரிய வணிக வளாகம், பள்ளி, கல்லூரி, கோல்ப் மைதானம், சைக்கிள் ஓட்டும் பாதைகள், ஓய்வாகக் கழிப்பதற்கு 200 திறந்த வெளிப்பகுதிகள் ஆகியவையும் அமையும்.

இம்மாபெரும் கப்பலில் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் குறைவில்லை. இதில் பல உணவகங்கள், திரையரங்குகள், விளையாட்டு அமைப்புகள் இருக்கும். விளையாட்டுப் பிரியர்களுக்கு ஏற்ற வசதிகளும் உண்டு. டென்னிஸ், கூடைப்பந்து, 'பவுலிங்' போன்ற விளையாட்டுகளில் ஈடுபடலாம். நீச்சல் குளம், பசும்புல் பரப்பு, 'ஸ்கேட்டிங்' வளையம், செயற்கைக் கடற்கரையில் அமர்ந்து தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் வசதி போன்றவையும் உண்டு.

இவ்வளவு பெரிய கப்பலை கடலில் நகர்த்துவது என்பது எளிதான விஷயமல்ல. அதற்கென்று, தலா 3 ஆயிரத்து 700 குதிரைச்சக்தி திறன் கொண்ட 100 டீசல் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். கற்பனைக்கு அப்பாற்பட்ட இக்கப்பலை கட்டி முடிக்க மூன்றாண்டுகளும் பல்லாயிரம் கோடி ரூபாவும் செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இக்கப்பலில் நிரந்தரக் குடியிருப்புப் பெறவும் பயணம் செய்யவும் கோடீஸ்வரர்களால் மட்டுமே முடியும்.


## வார நாளில் வரலாற்று நாயகன்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் பிறந்தது ஞாயிற்றுக்கிழமை. முதன்முறையாக குடியரசு தலைவரானது திங்கட்கிழமை. இரண்டாவது முறை குடியரசு தலைவரானது செவ்வாய்க் கிழமை. வழக்கறிஞராகி பதிவு செய்தது புதன்கிழமை. புகழ்பெற்ற கெட்டிஸ்பர்க் உரை நிகழ்த்தியது வியாழக்கிழமை. சுடப்பட்டது வெள்ளிக்கிழமை. உயிர் நீத்தது சனிக்கிழமை.



## பழங்கால அரசனின் சிதைந்து போன சிலை




எகிப்தை கி.மு 1386-1349 காலப்பகுதியில் ஆட்சி புரிந்த மூன்றாம் அமென்ஹொட்டெப் அரசனின் சிதைந்து போன சிலையின் தலைப்பகுதியும் ஏனைய சிதைவுகளும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எகிப்தின் புராதன பொருள் திணைக்களம் இவற்றின் படங்களை வெளியிட்டுள்ளது.

இந்த சிதைவுகள் அமென்ஹொட்டெப் அரசனின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற லக்ஷோர் (Luxor) ஆலயம் அமைந்துள்ள பகுதியிலிருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிதைவிலிருந்து மீட்கப்பட்ட இத்தலைப் பகுதி 8.2 அடி உயரமுடையதாகும்.

இதிலிருந்து இத்தலைக்குரிய சிலையானது மிகப் பெரியது என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சிலை செதுக்கப்பட்டுள்ள கருங்கல்லானது சுமார் 3,000 வருடங்கள் பழைமை மிக்கது என்றும் தெரியவருகிறது. மூன்றாம் அமென்ஹொட்டெப் அரசன் துட்டகாமன் அரசனின் பாட்டன் என்றும் கூறப்படுகிறது.



## மெக்சிக்கோ தொப்பி நடனம்

'ஜராபே டபாட்டியோ' என்னும் மெக்சிக்கோ தொப்பி நடனமானது, அந்நாட்டின் தேசிய நடனமாகும். இந்த நடனத்தை வெளிநாடுகளில் பிரபல்யமாக்கியவர் உலகப் புகழ்பெற்ற ரஷ்ய நடன நங்கையான அன்னா பவ்லோவா என்பவராவார்.1919 ஆம் ஆண்டு இவர் மெக்சிக்கோவுக்கு வருகை தந்தபோது அந்நாட்டுக் கலாசாரத்தில் மனதைப் பறிகொடுத்தாராம்.

இந்த நடனத்துக்கான இசை பல்வேறு நாட்டுப்புற இசை 'மெட்டுக்'களின் தொடர்ச்சியாகும். உண்மையில், இந்த இசையை 19 ஆம் நூற்றாண்டில் உருவாக்கியவர் குவாடலஜாரா என்ற இசைப் பேராசிரியர் ஆவார். மெக்சிகோ புரட்சியைக் கொண்டாடும் விதமாக 20 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற ஒரு விழாவில் முதன் முதலாக இந்தத் 'தொப்பி நடனம்' ஆடப்பட்டது.

இது ஒரு பெண்ணை நேசிக்கும் ஆண் ஒருவனின் கதையைக் கூறுகிறது. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஜோடிகள் இந்த நடனத்தை ஆடுகிறார்கள்.

இந்த நடனம் ஆடும் ஆண், பாரம்பரியமான மூன்று பிரிவு 'சாரோ சூட்'டை (மேல் ஆடை, அதன் மேலான சட்டை, வெள்ளிப் பொத்தான்களால் அலங்கரிக்கப்பட்ட கால் சட்டை) அணிகிறான்.



அதேநேரம் நடனமாடும் பெண், 'சைனா பாப்லோனா'வை அணிகிறாள். அதில் பூ போட்ட வெள்ளை ரவிக்கை, ஒரு வண்ணமயமான பாவாடை, பழங்கால வேலைக்காரப் பெண்ணுக்குரிய அலங்காரங்கள் எல்லாம் உண்டு. 'அன்னாபாவ்லோவா' தனது நிகழ்ச்சிகளில் தொப்பி நடனத்தை விரும்பி ஆடுவது வழக்கமாம்.


அன்னா பவ்லோவா





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பதற்காக விற்கப்படுகின்ற வரிப்புலிகள்

இந்தோனேஷிய அரசாங்கம் வரிப் புலிகளை வேற்று நாடுகளுக்கு விலை பேசி விற்க உத்தேசித்துள்ளதாக பரவியுள்ள செய்தியானது அந்த நாட்டின் மிருக பாதுகாப்பு அமைப்பினரின் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளது.

கூடுகளில் பிறக்கின்ற வரிப் புலிகளை 100,000 அமெரிக்க டொலர் விலைபேசி இவ்வாறு விற்பதற்குத் திட்டமிட்டுள்ளதாம் இந்தோனேஷிய அரசாங்கம். வரிப்புலிகளின் பெருக்கம் அதிகரிக்கின்றமையால், அவை மக்கள் குடியிருப்புக்களை நோக்கிப் படையெடுப்பதாகவும் அதனைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே இவ்வாறு அவை விற்கப்படுவதாக காரணம் கூறப்படுகின்றது. ஆனால், இதற்கு மாறாக காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி, மிருகங்களின் வாழ்விட அழிவைக் கட்டுப்படுத்தினால், மக்களின் குடியிருப்புக்களை நோக்கி அவை வரவேண்டிய தேவை உருவாகாது என்று வனவிலங்குகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவிக்கின்றது.





"நாம் இந்த வரிப்புலிகளை வீணே விலைபேசியோ, விற்கவோ, வாடகைக்கு விடவோ முயற்சிக்கவில்லை. அவற்றைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் விருப்பமுடைய அதற்கான வசதிகளை உடையவர்களுக்கே அவற்றை விலைக்கு விற்கின்றோம். வரிப்புலிக் குட்டிகளை பராமரிப்பதென்பது இலகுவான காரியமல்ல" என்று தெரிவிக்கின்றார் இந்தோனேஷிய வனவிலங்குகள் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதான அதிகாரியான 'டரோரி' என்பவர்.

மேலும் அவர் கூறுகையில், "இவற்றை நாம் விலைக்கு விற்றாலும் அவற்றின் முழு உரிமையையும் நாம் கொடுக்கப்போவதில்லை. உரிமை இந்தோனேஷிய அரசாங்கத்திற்கே உரித்துடையதாக இருக்கும். இத்தகைய நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவை விற்கப்படவுள்ளன" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல ஒரு சோடி வரிப்புலியை விலைக்கு வாங்குபவர் 108,000 அமெரிக்க டொலர்களை வைப்பிலிட வேண்டியிருக்கும். இந்த பணமும்கூட வரிப் புலிகளை பாதுகாக்கும் பணிகளுக்கே பயன்படுத்தப்படும் எனவும் வனவிலங்குகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. வரிப் புலிகளை ஒருவர் வாங்க முன்வருகையில், அந்த வரிப்புலிகளுக்கு வழங்கப்படவுள்ள இருப்பிடம் போதிய வசதிகளைக் கொண்டுள்ளதா? என்பது குறித்து நன்றாக ஆராயப் பட்ட பின்னரே உரிய வருக்கு அவை விற்கப் படவுள்ளனவாம்.






நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்கமுடியாது

– ஜோன்ஸன்

ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில், அவன் வாழ்வு சிறக்காது

– ஷாம்பர்ட்




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, மார்ச் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 10, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org